# திராவிடநாடு

27—10—57 | வார வெளியீடு | விலை 16 காசு


## வாழ்வதெங்கே?

—[ பிரிவினைப் பித்தன் ]—

எல்லோரும் இந்நாட்டு
மன்னர்; ஆமாம்
எழுத்தளவில் இன்றளவும்
உள்ள திங்கே!
சொல்வதிலே முன்னொருநாள்
இனிமை தேக்கி
சோர்வின்றி; வருவோர்க்கு
வாழ்வு தந்த
நல்லோர்கள் தெருக்குப்பை
யோர மின்று
நாயோடு போராடு
கின்றார்; நெஞ்சைக்
கல்லாக்கி வாழ்கின்றார்
செல்வர்; ஆள்வோர்
கண்ணிழந்தார் காதிழந்தார்
வாழ்வ தெங்கே?

# "தீபாவளியே! ஏனோ வந்தாய்"?

மேனியை மறைப்பதற்குக்கூட ஆடையின்றி வாழும் ஏழை இல்லத்திற்கு, கோடி உடுத்தும் கொண்டாட்டம் விஜயம் செய்கிறது. வறுமைக் காதலி பொருமலுடன் வாடும் மனைக்கு வந்த தீபாவளியை நோக்கி, மனைக்கு உரியான் 'வாழ்த்து'கிறான்:-

"ஏனோ வந்தாய்?
ஏனோ வந்தாய்?
தீபாவளியே!
ஏனோ வந்தாய்?
வானம் பொழியும்
மழையின் வாடைச்
சீற்றம் தனக்கு
ஆற்றா மேனியை
மூடச் சிறு துணி
கூட இல்லாத
ஏழை என வீட்டிற்கு
ஏனோ வந்தாய்?
படைச் சுவர் ஓர்புறம்
பாழாகிறது
வெதும்பிய உளத்தோடு
மனையாள் ஏங்க,
பொதும்பிய அடுப்பில்
பூனை தூங்க
ஊரார் உடுத்திய
ஆடைகள் கண்டும்
பலகாரம் பண்ணும்
வாடைகள் நுகர்ந்தும்
வெடியின் சப்தம்
இடியெனக் கேட்டும்
பிள்ளைகள் என்னை
அல்லற்படுத்தி
தம் சிறு கன்னம்
கண்ணீர் புரளப்
பார்த்தும் உயிரோடு
இருக்கும் என் மனைக்கு
ஏனோ வந்தாய்?
ஏனோ வந்தாய்?"

மழை பொழிகிறது. மக்களெல்லாம் "வந்ததே நல்ல மழை" என்று மகிழ்கிறார்கள். ஆனால் அவனுக்கோ மழை வந்துவிட்டால் குளிர் வந்துவிடும்! "குளிரால் நலியும் மேனியை மூடுதற்கு சிறு துணிகூட இல்லையே!" என்று குமுறுகிறான். அடைமழை விடாது பெய்வதால், அவனது வீட்டில் நடமாடும் இடமெல்லாம் தண்ணீரால் நனைந்துள்ளன. அடுப்பிலோ பூனை தூங்குகிறது. அடிசிற்கினியளான அவனது மனையாளோ ஏங்கும் இதயத்தோடு இடிந்து போயிருக்கிறாள். இல்லத்துச் சுவரோ இன்றோ நாளையோ என்றிருக்கிறது. இந்நிலையிலே அவனது பிள்ளைச் செல்வங்களோ, அவர்களது வீதியிலே புத்தாடை அணிந்து பூரித்துச் செல்வோரைக் காண்கிறார்கள். பிற இல்லங்களில் செய்யும் பேருண்டிகளின் வாடைகளை நுகர்கின்றார்கள். தங்களைப் போன்ற பிள்ளைகள் தனித்ததோர் மகிழ்ச்சியுடன், வெடித்துக் கொண்டிருக்கும் வெடிகளைப் பார்க்கிறார்கள். அவர்களுக்கு ஆர்வம் பொங்குகிறது. அதைப் பார்க்கும் அவர்களின் தந்தையான அவனுக்கோ துக்கம் பொங்குகிறது! அந்நிலையிலே

"என் மனைக்கு ஏனோ வந்தாய்" என்று தீபாவளியைப் பார்த்து அவன் வருந்திக் கேட்டதிலே எவ்வித வியப்பும் இல்லை அல்லவா?

"வறுமை அரக்கன்
மாய்ந்தானில்லை!
சிறுமை அரக்கன்
தீய்ந்தானில்லை!
மடமை அரக்கன்
மடிந்தானில்லை!
கொடுமை அரக்கன்
குலைந்தானில்லை!
அவை எமை ஆட்டி
அழிக்கும்போது
எவனிறப்பிற்கோ
இத்தீபாவளி?"

வறுமை அரக்கன் வாழ்வாங்கு வாழும்போது—சிறுமை அரக்கன் தீயாதபோது-மடைமை அரக்கன் மாண்டிடாதபோது — எவனோ இறந்ததற்காக என்ன தீபாவளிக் கொண்டாட்டம்! இத்தனை அரக்கர்கள் — நரகாசுரர்கள் மாயாது நாளும் வாழ்ந்து வரும்போது, இல்லமெல்லால் வெடிகள் முழங்கச் செய்து, புத்தாடை புனைந்து, வயிறு நிறையப் புசித்து முடிப்பதிலேயே தீபாவளி விழாவைத் தீர்த்துவிடலாமா? தீபாவளியை விளக்கி, அத்துடன் கடமையையும் விளக்குகின்ற கவிதை, தனியொரு உணர்ச்சியைத் தருகிறது:—

எள் விதைக்க அறியாமல்
எண்ணெய் தேய்த்தாய்!
இருள்கெடுக்க அறியாமல்
விளக்கு வைத்தாய்!
கொள்கையினைக் கடைப்
பிடிக்கும் தீரமில்லாக்
கோழையர்க்குத் தீவிளிக்
கொண்டாட்டம் ஏனோ?
சேராதே, பதறாதே
பொறுமையோடு
தொண்டியற்றிக் கச்சை
கட்டி முன்னேநிற்பாய்!
ஆராலும் உன்னை வெல்ல
இயலாதென்னும்
ஆண்மை நினைவினை நெஞ்சில்
ஏற்றிவைப்பாய்!
பாராளும் திறமை எனக்
குண்டென்றே சொல்
பாமரர்க்கும் சுதந்திரத்தில்
ஊக்கம் ஊட்டு!
சேராதார் யாவரையும்
சேர்த் தொன்றாக்கு!
தீவிளிநீ கொண்டாடும்
காலம் காண்பாய்!"

உண்மைத் தீபாவளிக் கொண்டாட்டத்தைக் கவிஞன் சுட்டிக் காட்டிக் கடமையை விளக்குகிறான். 'ஒளியின்றி இருள் பரவி நிற்கும் நிலையிலே, பாராளும் திறமை பெற்று, சேராதாரையும் சேர்த்துக் கொண்டாடுதலே தீபாவளி!' என்று விளக்கும் கவிதையிலே - புதுமைக் கருத்திலே நாம் ஈடுபாடு அடைகிறோம் அல்லவா?

—"வீரகேசரி"

# மெய்ப்பொருள்

16] ஆண்டு சந்தா ரூ. 8 [27—10—57] தனிப் பிரதி 16-காசு [இதழ் 15


அரியதோர் ஆராய்ச்சியைக் கண்டுபிடித்ததுபோல் சென்னையில் நடைபெற்ற கூட்டமொன்றிலே அன்பர் காமராசர் அறிவித்துள்ளார், 'வடக்கு தெற்கை ஏமாற்றுகிறது' என்று கூறிடும் கட்சியும் இருக்கிறது, என்பதாக! 'அறிவிப்பு' நடத்தியது மட்டுமின்றி, 'அவர்கள்' வலையில் விழவேண்டாமென்றும், வழக்கம்போல் எச்சரிக்கை விடுத்தாராம்! "இதிலென்ன புதுமை, எங்கு போனாலும், அவரும் அவர்தம் சாகாக்களும் இதைத்தானே பேசுகின்றனர்?" எனக் கேட்கலாம் தோழர்கள். நாம் வலையை வீசவுமில்லை, அதில் வந்துவிழும் மீன்களாகவும் மக்கள் இல்லை. எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும், மெய்ப்பொருள் அறிந்திடும் விடிவெள்ளிகளின் கூடாரமாகி வருகிறது, தென்னகம்! ஒரு காலத்தில், விதண்டாவாதம் — வெற்றுரை — கோமாளிகளின் கூச்சல் எனக் கூறியோரெல்லாம், இன்று நாம் கூறிடும் கருத்துரைகளுக்குப் படிப்படியாக வந்துகொண்டே உள்ளனர்!! இதனை அறியாதவரல்ல, காமராசர். அவருடைய கட்சிக்கு, இந்திய உபகண்டத்திலேயே கோட்டை என்று கூறப்படுகிற இடம், ஐக்கிய மாகாணமாகும். பண்டித நேரு பிறந்த இடம், பண்டித பந்தின் சொந்த மாநிலம், இந்தியாவை ஆட்டிப் படைப்பதாகப் பிறரால் கருதப்படுகிற இடம், அங்கேயேகூட இந்தக் கிழமை 30-இடங்களுக்கு நடைபெற்ற நகரசபைத் தேர்தலில் 25-இடங்களில் காங்கிரஸ் படுதோல்வி அடைந்திருக்கிறதாம்! இவ்விதம், தமிழகத்தில் மட்டுமின்றி, செல்வாக்கு உள்ள இடம் என்று கருதப்படுகிற இடங்களில்கூட காங்கிரஸ் சரிந்து கொண்டு வருகின்றது. வளர்பிறையாக உள்ளன, அந்தந்த வட்டாரத்துக்காகப் பாடுபடும் கட்சிகள்! எல்லா வட்டாரங்களையும் 'ஏக' மாக்க நினைக்கும் காங்கிரசோ தேய்பிறையாகிக்கொண்டே வருகிறது!! இருந்தும், காமராசர் போன்றோர், காங்கிரசை விட்டால், மக்களுக்கு நல்வாழ்வு வழங்கக்கூடிய கட்சியே இல்லை என்று கர்ச்சிக்கின்றனர். அதுபோது, எதிர்க்கட்சிகள் என்றாலே, எதையெதை எடுத்து வீச முடியுமோ அதையெல்லாம் சொல்லி ஆர்ப்பரிக்கிறார்கள். அவ்வகையில், வடக்கு தெற்கை வஞ்சிக்கிறது என்று சொல்லும் நாம் வலைவீசுவோர்களாம்! விழாதீர்கள், என்று எச்சரிக்கிறார், இவர், மக்களே!! வடக்கு, தெற்கை வஞ்சிக்கிறதா இல்லையா, என்பதை விளக்க 'அரிச்சுவடி'யிலிருந்து நாம் ஆரம்பிக்க வேண்டியதில்லை, காமராசரைவிட, கடுமையாக இக்கூற்றினைத் தாக்கியோரெல்லாம் இன்று ஒப்புக்கொள்ள ஆரம்பித்துவிட்டனர். காங்கிரஸ் மந்திரிகள் வேண்டுமானால்—மந்திரிகளாயிருப்பதால்—மறுக்கலாம். ஆனால், பொருளாதார மேதைகள், அரசியல்நிபுணர்கள், பேராசிரியர்கள் அனைவரும், நம் கூற்றை ஒப்புக்கொள்கிறார்கள், அவ்வளவேன்? என்றைய தினம் காமராசர், இவ்விதம் பேசினாரோ அதேநாளில் அதே சென்னையின் இன்னொருமூலையில் பேசிய **ஆச்சாரியார்** அவர்கள் கேட்கிறார், "இந்தி எதற்கு இங்கு? சமரசம் பேசியபடியே, கட்டாயப்படுத்த மாட்டோம் என்று கூறிக்கொண்டே, கார்டு கவர்களிலும், மணியார்டர் பாரங்களிலும் புகுத்துகிறார்கள்! என்ன பொருள் இதற்கு?", எனும் கருத்துடன். ஆச்சாரியார், காமராசரைப்போல— ஏன்? காமராசரைவிட — வடநாட்டவரின் போக்கையும் நோக்கையும் நன்றாக அறிந்தவர். அவர், இன்று இவ்விதம் பேசுகிறார்! இதே குரலை, எப்போதோ எழுப்பினோம்!! இன்று அக்குரல், ஆச்சாரியாரிடமிருந்து, எதிரொலிக்கிறது—வடநாட்டவர் இந்தியைப் புகுத்திடக் காட்டிடும் ஆர்வத்தை 'வெறி' எனும் வார்த்தையைச் சொல்லி, விளக்குகிறார். சொன்னோம்! சொல்கிறார்!! என்று கூறி மகிழ்ந்திடவில்லை, நாம். வடக்கு, தெற்கை வஞ்சிக்கிறது என்பதற்கு ஆதாரம் சொந்தக் கூடாரத்திலிருந்தே கேட்கிறது! எனினும், மேடையேறி, அது உண்மையல்ல என்று உரைக்க முன்வருகிறார் காமராசர்!!


> **"என்னை, அவர்கள் ஒரு துரோகி, என்று கருதுகிறார்கள். வடக்கில், இப்படிப்பட்ட உணர்வு தான் உள்ளது."**

ஆச்சாரியார் பேசிய கூட்டத்தில் காங்கிரஸ் எம்.பி. டாக்டர் சுப்பராயன் தெரிவித்தது, இது. அவரை, ஒரு துரோகியைப் போலக் கருது

கின்றனராம், வடவர்! இந்தி மொழியை அவசரமாகத் திணிக்கக்கூடாது, என்று மொழிக் குழுவில் அடித்துப் பேசி தன் கருத்தையும் எழு தினாலல்லவா, அதனால் அவரைத் துரோகி என்று நினைக்கின்றனராம், வடக்கே!! பல் லிளித்து, பதிகம் பாடி, உங்களைப் போலுண்டோ என்று தண்டனிட்டு, தாசனாகயிருந்தால், புன்சிரிப்பு தரும் போலும் டில்லி — அதனால் தான், காமராசர் போன்றோரும், தமிழ் நாடு எனப் பெயர் வைக்க, தமிழகத்தின் இடங்களைப் பெற, டில்லி மறுத்தால், 'சாமியே, சரணம்!' என்று திரும்பி ஓடிவருகின்றனர், எனத்தெரிகிறது. டாக்டர் சுப்பராயன், இந்தியைப்பற்றி, ஆங்கிலத்தின் மீதுள்ள அன்பால் அல்ல, ஆங்கிலத்தை நீக்குவது அனுபவ சாத்தியமல்ல என்பதால் அவ்வண்ணம் கூறியதும், 'துரோகி' பட்டம் கிடைக்கிறதாம்! இப்போதுதான் புரிகிறது, சுப்பராயன் போன்றோரைவிட, காமராசருக்கு டில்லி ஏன் பரிவு காட்டுகிறதென்பதும், இவர் படத்தைத் திறக்க தேபரே வந்து செல்வதன் காரணமும்!!

நம்மைக் குறைகூறட்டும், கவலையில்லை; நமக்கு. ஆனால், வடக்கு தெற்கை வஞ்சிக்கிறது என்பது பொய் — உண்மையல்ல, என்று உரைக்கின்றனரே, அதுவும் பொதுக்கூட்டங்களில், அவர்களைக் கேட்கிறோம், வடக்கு வஞ்சிக்கவில்லையென்றால், தபால் தலைகளில் திருவள்ளுவர் படம் வந்ததுண்டா, இதுவரையில்? அண்மையில் வந்த 'சுதந்திரப் போர்' செய்திப் படத்தில் தெற்குக்கு இடம் தந்ததா டில்லி! அதிருப்திக் குரல் கேட்டதும்தானே, 'வாபஸ்' பெற்றது. வடக்கு, தெற்கை வஞ்சிக்காமலில்லை — என்பதற்கு இது ஒன்றே போதாதா?

★



# சாவடி

"ஒற்றன்"

"தீபாவளி போய்விட்டது. எங்கெங்கு வெடிவிபத்துகள் நடந்தன, என்கிற செய்திகள், ஏடுகளில் இனி மேல் காணலாம். இல்லையா, மணிமுடி?"

"வரும் பெரியய்யா வரும்! ஓங்கோலில் ஒன்பது பேர் மாண்டனராம், வெடிவிபத்தால். இந்தூரில் இருவர் பலி. இந்தச் சேதிகள்போல ஏராளம் வரும். ஏன், நீங்கள் இந்த ஆண்டு தீபாவளி கொண்டாடவில்லையோ?"

"என்ன தீபாவளி, மணிமுடி! பொங்கல் கொண்டாடுகிற அளவுக்கு என்னமோ, ஒருதிருப்தியே வரவில்லை... வேண்டாம் என்று விட்டுவிட்டேன்."

"தீபாவளிபற்றி தினமணியில் ஒரு கட்டுரை கண்டீர்களோ?"

"என்ன கட்டுரை!"

"இந்தியா—இந்துமதம், என்றெல்லாம் பேசுகிறார்களே ஒவ்வோரிடத்திலும் இந்த தீபாவளியைப்பற்றி என்னென்ன கருத்துக்கள் உலவுகின்றன என்று எழுதியிருக்கிறார் ஒருவர்......"

"கருத்து என்ன! நரகாசூரனைக் கிருஷ்ணன் கொன்றார் என்கிற கதைதானே எங்கும் இருக்கும்......"

"அதுதான் இல்லை! மகாவிஷ்ணுவுக்கும் இலட்சுமிக்கும் திருமணம் நடந்த நாள் இது. ஆதலால், கொண்டாடுவோம் என்று வடக்கில் கொண்டாடப்படுகிறதாம்."

"அப்படியா?"

"கேளுங்களேன்! வடக்கில் இராமபிரான், இராவணனைக் கொன்று வெற்றியோடு அயோத்தி திரும்பியது, தீபாவளி நாள் என்பதால், இன்று இராமனை வைத்துக் கொண் டாடுகிறார்களாம்! மராட்டியத்தில், எண்ணெயிலே இலட்சுமி வாசம் செய்கிறாள் என்கிற ஐதீகமாம். அத னால், அதைத் தேய்த்துக்கொள்ளு கிறார்களாம்! மாபலிச் சக்கரவர்த்தி யின் நினைவாகவும் இந்நாள் கொண் டாடப்படுகிறதாம்!! மத்தியப் பிரதேசத்தில் இராமர் பட்டாபி ஷேகம் செய்து கொண்ட நாள் என்று இதனைக் கொண்டாடுகிறார் களாம்! வங்கத்தில், காளி பூசை யாக இந்நாளைக் கொண்டாடுகிறார் களாம்! நேப்பாளத்தில், நமது நாட்டுப் பொங்கல் நாளைப் போலக் கொண் டாடுகிறார்களாம்!!"

"என்னமோ மணிமுடி! கிருஸ்துவர் களுக்கும் முகம்மதியர்களுக்கும் விழா வென்றால், உலகமுழுதும் ஒரேமாதிரி யாகவும் ஒத்த கருத்தோடும்தான் உள் ளது."

"அதுதான் கிடையாதே பெரி யய்யா, இங்கே! அதனால்தானே, எத் தர்களும் ஏமாற்றுபவர்களும் அதிகம் உள்ளார்கள். பேதங்களும், பிளவு களும் ஏராளம் உள்ளன."

"இந்த இலட்சணத்தில் மதத்தைச் சொல்லி இந்தியா ஒரே நாடன்றோ என்று வேறுகூறுகிறார்களே!!"

"அந்த அழகைத்தான் பெரியய்யா தெரிந்தோ தெரியாமலோ, தினமணி யார் விளக்கியுள்ளார்."

★

# "எங்கே சகோதரத்துவம்?"

"மன்னவா! நான், இவரிடத்தில் கொஞ்சம் நிலம் வாங்கினேன். பயிரிடுவதற்காக அதை வெட்டியபோது, பெரும் புதையல் அகப்பட்டது. இவரிடத்தில் நான் நிலத்தை மட்டும்தான் விலைக்கு வாங்கினேன். ஆதலால், அகப்பட்ட புதையல் எனக்குச் சொந்தமானதன்று. என்ன சொன்னாலும், இவர் புதையலை எடுத்துக்கொள்ள மறுக்கிறார்..."

" அரசே! வாதியைப்போல எனக்கும் மனச்சாட்சியுண்டு. நிலத்தை அவருக்கு விற்றுவிட்டதால், எனக்கும் அந்தக் கழனியில் கிடைத்த அந்தப் பொருளுக்கும் சம்பந்தமில்லை. உரிமையும் கிடையாது. தயவுசெய்து, என்மீது இந்தப் புதையலைத் திணிக்காமல், தீர்ப்பளியுங்கள்."

மன்னன் எப்படி தீர்ப்பு வழங்குவான், என்று ஆச்சரியமாயிருந்தது 'அவனு'க்கு! பொருளுக்கும் பொன்னுக்கும் போட்டியிடுவோரையும், அடித்துக்கொண்டு சாவோரையும் கண்டிருக்கிறானே ஒழிய, இபபடியொரு வழக்கினை அவன் இதுகாறும் சந்தித்தது கிடையாது! எனவே, வியப்பும் திகைப்பும் கலக்க, அரசனுடைய தீர்ப்பை எதிர்பார்த்தான். சபையும், மன்னன் வழங்கும் நீதியை, கூர்ந்து கவனித்தது. இவர்களையெல்லாம் விட, அந்தப் புதையல் தங்களிடம வந்துவிடாமலிருக்க வேண்டுமே என்கிற கவலை அந்த இரு குடியானவர்களுக்கும் இருந்தது!! மன்னன், வாதியைக் கூப்பிட்டான்.

"பெரியவரே! உமக்கு மகன் ஒருவன் இருக்கிறானல்லவா?"

" ஆம், மன்னவா!!"

" பிரதிவாதியே! உமக்கு, மகள் ஒருத்தி உண்டல்லவா?"

"இருக்கிறாள், அரசே!"

" அப்படியானால், இருவரும் சம்பந்தியாகி, கழனியில் கிடைத்த புதையலை மணமக்களுக்குப் பரிசாகக் கொடுத்துவிடும்படி நான் கட்டளையிடுகிறேன்."

அரசன் சிக்கலான இவ்வழக்கைத் தீர்த்தது குறித்து பெருமகிழ்ச்சி ஏற்பட்டது அனைவருக்கும்! சபைக்கு விருந்ினனாக வந்திருந்த அவனும் பெருவியப்பு அடைந்தான்!!

*

ஆபிரிகாவின்மீது படையெடுத்துச் சென்ற மாவீரன் அலெக்சாண்டர், இப்படியொரு காட்சியைக் கண்டதாகக் கதையொன்றுண்டு. கிடைத்த பொருள்மீது

**அரங்கண்ணல்**

ஆசைகொள்ளாத அளவுக்கும் மக்களிருக்கிறார்களா, என்று வியந்தானாம் அலெக்சாண்டர். அவனை, ஆபிரிக மன்னன் நோக்கி, "மாவீரரே! இப்படியொரு வழக்கு வந்தால் உங்களூரில் என்ன செய்வீர்கள்?", என்று கேட்க, "என்ன செய்வோம்! இரண்டு பேரையும் பிடித்துச் சிறையில் தள்ளிவிட்டு புதையலை சர்க்கார் கஜானாவில் சேர்த்துவிடுவோம்...", என்றானாம். அதைக் கேட்ட ஆபிரிக மன்னன், "உங்களூரில் மழை பெய்கிறதா?", என்க, "ஏன்? பெய்கிறது!", என்று மாவீரன் சொல்ல, "...அப்படியானால் உங்களூரில் உள்ள ஆடுமாடுகளுக்குப் புல் பூண்டுகள் வேண்டுமே! அதற்காக மழை பெய்கிறதும், வெயில் எரிக்கிறதுமேயல்லாமல், உங்களுக்காக அல்ல," என்றானாம். நடந்ததோ இல்லையோ, இக்கதை கூறும் கருத்து, அருமையானதாகும். ஆபிரிக மன்னனது குடிமக்கள், பேராசை கொள்ளுமளவுக்கு, வாழ்க்கைத் தரம் இல்லை. அவ்வளவு இன்பமும் அன்பும் அரசோச்சியிருக்கிறது. எவருக்கும் 'தேவை' என்பது இல்லை! 'தேவை' இல்லாதபடி மக்களிருந்ததால், வம்பும் தும்பும் இல்லாத, சமரச சன்மார்க்கம இருந்தது அங்கே!!

இந்தக் கதை மண்ணாசையும் பொன்னாசையும் கொண்டுலவும், இந்தக் காலத்தவருக்கு ஆச்சரியமாகவே யிருக்கும்! ஏனெனில், புதையல் ஒன்று கிடைத்துவிட்டால், அதற்கு உரிமை கொண்டாட, ஊரேகூட திரண்டு வரும். அயலானைக்கூட இருக்கவேண்டியதில்லை! அண்ணனாலும், தம்பியானாலும், மாமனானாலும், மைத்துனனானாலும் கால் காணி நிலத்துக்காகப் போடும் சண்டைகள் ஏராளம், உலகில். மாமனார் கொடுக்கவேண்டிய சீர்வரிசைகள் வரவில்லை என்பதற்காக மனைவியைத் திரும்பிப் பாராத வன்னெஞ்சகர்கள்கூட உண்டே இங்கு! சொத்து சேர்க்கும் ஆசையும், பண மோகமும் எந்தவித அக்கிரமத்துக்கும் இன்று மனிதனை ஆளாக்கிவிடுகிறது. ஏழை, தான் வாழ வழியில்லாவிடில், எந்த அக்கிரமத்துக்கும் ஈடுபடத் துணிகிறான்! ஏழைகள்

வயிற்றிலடித்தால் தான் தன் பெட்டி நிரம்பும் என்று கருதும் பணக்காரன், அதுபோலச் செய்யக் கொஞ்சமும் அஞ்சுவது கிடையாது!! நடமாடும் உருவமெல்லாம் ஈசன் கோயில்—அன்பே தெய்வம்—ஐயமிட்டுண்—ஏழைக்கு இரங்கு என்பதுபோன்ற இலட்சக் கணக்கான முதுமொழிகளைப் படித்தாலும், அவைகள் புத்தகத்தோடு சரி; வாழ்க்கை என்பது வேறு என்கிற கொள்கையே இன்று அரசோச்சுகிறது, எங்கும்.

வாழ்க்கை என்கிற மாளிகைக்குள் புகுந்து, ஒவ்வொரு வழியில் திருடியே பிழைக்கிறார்கள்! அகப்பட்டதைச் சுருட்ட நினைக்கிறார்கள் — எதிர்ப்பட்டோரை வீழ்த்த எண்ணுகிறார்கள்—காவலாளியிருப்பது ஆபத்தெனத் தெரிந்தால் அவனைக் கொல்லவும் அஞ்சுவதில்லை—அந்தளவுக்கு, சமூகம் இன்றைய தினம், அறம்கெட்டு, வாழ்க்கை ஒரு கலை என்பது மாறி, மாபெரும் போராட்டம் என்று கதாசிரியர்கள் வர்ணிக்கிற அளவுக்குச் சென்றுள்ளது. இந்தக் கேடுகெட்ட நிலைக்கு மூலகாரணம் என்ன? — யாவரும் அறிவோம் பதில்! ஒவ்வொருவருக்கும், அவரவர் தேவைக்கேற்றபடி வாழ்வதற்கு வசதிகள் கிடைத்துவிடின், 'பாபங்களும்' மலியாது; பாசமும், பெருகும்; வாழ்க்கையும் ஒரு கலையாகும். ஏனைய கலைகளும் செழிக்கும்! இல்லார், என்பார் ஒழிந்து எல்லோரும் நல்லார் என்கிற நிலை மலரும்!! இன்றுள்ள சமூக அமைப்பில், இல்லானை, ஈன்றெடுத்த தாயும் வேண்டாள், என்கிற கோரமான காட்சியினைத்தான் காண்கிறோம்.

அண்டை வீட்டான் பச்சையாக வாழ்ந்தால், பொறுப்பதில்லை, மனம். பக்கத்து வீட்டுப் பையன், மேல்நாட்டுக்குப் படிக்கச் செல்லுகிறான் என்றால், ஏழைப் பெற்றோருக்குத் துடிக்கத்தான் செய்கிறது, இதயம். ஏனெனில், வாய்ப்பு, வசதியிருப்போருக்கே கிடைக்கிறது! ஏழை, புழுவாகி, மண்ணோடு கலக்கிறான்!! அன்பும், பண்பும், எப்படி மலரும்? போட்டியும் பூசலும், அடிதடியும் கொலைகளவும்தான் வளரும்!! இந்த உண்மையினை அறிந்த காரணத்தால்தான், அறிஞர்கள், பல்லாண்டுகளாகச் சிந்தித்து, சமூக அடிப்படையில், வல்லான் வகுத்ததே வழி என்று இருக்கும் முறை மாறி, **எல்லோருக்கும் எல்லாம் சொந்தம்** என்கிற நிலை உதயமாக வேண்டும் என்று உரைத்துச் சென்றார்கள். மனிதனிடம்காணப்படுகிற போட்டி, பொறாமை, சண்டை, அறமிலாதபண்பு, ஆகியவைகளை நமது மூதாதையரும் உணராமலில்லை! ஆனால், மேல்நாட்டு அறிஞர்களைப்போல, இவர்கள், மனிதனுக்குள் புகுந்து ஆராய்ச்சி நடத்தவில்லை—யாவும் 'அவன்' செயல், அவன் படைப்பின் லீலாவினோதங்கள் இவை, இப்படியே வாழ்ந்துவிட்டுப்போக வேண்டியதுதான் என்கிற சித்தாந்தத்துக்குள் ஆழ்ந்து — இந்தப் பீடத்தின்மீது அமர்ந்துகொண்டு, மக்களைப் பார்த்து, "ஆசையை அடக்குங்கள்! எல்லாம் மாயை—மண்ணாவது பொன்னாவது!!" என்கிற வெறுப்புத் துறவை, வளர்த்தார்கள். அவர்கள்மீதும் குற்றம் சொல்வதற்கில்லை! சமுதாயக் கேட்டைத் தீர்ப்பதற்குரிய வழி தெளிவாகப் புலனாகாததால், இதுபோல 'எல்லாம் மாயை' எனும் கோட்பாட்டினைப் புகுத்தினார்கள்!!

தாயுமானவர் — பட்டினத்தடிகள் — அருட்சோதியார், இதுபோலப் பலப்பலர், எழுதியும் அருள்மொழி சிந்தியும், இன்று நாம் காண்கிற காட்சி என்ன? காதற்ற ஊசியும் வாராது காண் கடைவழிக்கே! — என்று, எந்த 'கோயில் தர்மகர்த்தா'வும் சொத்துக்களையெல்லாம் ஆண்டவனுக்கு எழுதிவைத்துவிட்டுப் போய்விடவில்லை! ரசித்துப் படிக்கிறார்கள் — கருப்பொருள் என்ன அரும் பொருள்யாது, என்று ஆராய்ச்சியும் நடத்துகிறார்கள். ஆனால், மனிதனுடைய வாழ்க்கை இன்னும் போராட்டமயமாக உள்ளதே, ஏன் சமரச சன்மார்க்கம் ஏற்படவில்லை, அன்பே திறவுகோல் எனும் நன்னெறி அரும்பவில்லை என்பதைப்பற்றி அறிய மறுக்கிறார்கள். அறிந்தவர்கள் உரைத்தாலும், பிடிவாதம் காரணமாகவும், தமது ஆதிக்க நிலை தகர்ந்துவிடுமோ எனும் பயத்தாலும், உணராதவர்கள்போல் நடிக்கிறார்கள். ஏதுமறியாதவர்கள் மட்டுமல்ல, சகலமும் கற்றவர்கள்கூட!!

*

இந்த விசித்திரமான சூழ்நிலையை அறியாதவரல்ல, தேசுமுக். இந்திய சர்க்காரில் நிதி அமைச்சராகயிருந்து பணியாற்றியவர்—காசடிக்கும் 'ரிசர்வ்' பாங்கியின் கவர்னராகமிருந்திருக்கிறார்—மேல்நாட்டு அறிவும், அதற்கீடாக இந்த மண்ணின் விபரங்களும் நன்றாகத் தெரிந்தவர். பெரிய பொருளாதார மேதை. சோஷியலிசம் பற்றியும் அறிவார்—குடியரசுக் கோட்பாட்டினைப் பற்றியும் அறிவார் — மார்க்சும் படித்திருக்கிறார் — மனித வரலாற்றினையும் நன்றாக அறிவார். இருந்தும் அவர் இந்த கிழமை, அண்ணாமலைப் பல்கலைக் கழக பட்டமளிப்பு விழாவிலே பேசியபோது, சோகத்தோடு கேட்டிருக்கிறார், "எங்கே சகோதரத்துவம்?" என்று!! "பிரெஞ்சுப் புரட்சியின் விளைவாக முகிழ்த்த சுதந்திரம்—சமத்துவம் — சகோதரத்துவம் (Liberty,

"தென்றல்"லில்

9—11—57 இதழிலிருந்து

மா. கி. தசரதன், எம். ஏ.,

தரும்

அத்திப் பழம்

அற்புதத் தொடர்கதை ஆரம்பமாகிறது!

Equality, Fraternity) எனும் முழக்கங்களை, அறிவுயுகத்தில் வாழும் நாமனைவரும் அறிவோம். அதில், கடைசியில் சொல்லப்படும், சகோதரத்துவம் இருக்கிறதா?'', என்று வேதனை கலக்கக் கேட்டிருக்கிறார்.

சர்வதேச அரங்கில் நடக்கிற நிகழ்ச்சிகளைப் பார்த்திடின், மனிதனை மனிதன் சகோதரனாகப் பாவிக்கும் உணர்ச்சி உள்ளதோ என்றால், சிறிதும் தென்படவில்லையே, என்று அங்கலாய்க்கிறார்! 'சகோதரத்துவம்' எனும் சொல், ஒரு நாடு, என்ற எண்ணத்திலோ அல்லது ஒரு கூட்டுச் சமூகம் என்கிற பொருளிலோ தான் கருதப்படுவதால், மனிதனுக்கு மனிதன் அன்பு காட்ட வேண்டுவதுபோல, நாட்டுக்கு நாடும் 'சகோதரத்துவம்' காட்டி, கூட்டுறவோடு வாழலாம்—எங்கே இருக்கிறது? எங்கு பார்க்கினும் பூசலும் புகைச்சலும்! சின்னஞ்சிறு கயானா முதல், மிகப் பெரிய அமெரிக்காவரையில், தகராறு இல்லாத இடமே கிடையாது. சண்டைகளைத் தீர்த்துக்கொள்ள 'ஐ. நா. சபை' என்று ஒன்று அமைத்துக்கொண்டும், ஒவ்வோர் நாளும், "நீயா! நானா!!", என்கிற தகராறே அங்கும் நடந்துகொண்டிருக்கிறது. மனிதனை மனிதன் மதிப்பதுமில்லை! இன்னொரு நாடும், தனது சகோதர நாடு என்கிற எண்ணமும் இல்லை!! கூடாரமும், அதற்குள் ஆடு மாடுகளைப் போல, நாடுகளை இழுத்துப் போட்டுக்கொள்ளும் பலப் போட்டியுமே நடைபெறுகிறது. இந்த அலங்கோலம் பற்றி, மனித உணர்ச்சியும், 'மனிதன்' என்கிற வார்த்தையின் பொருளை உணர்ந்தோரும், வருந்தவே செய்வர். தேசுமுக் அவர்கள், இந்த சிந்தை குலுங்கும் வேதனையைச் சுட்டிக் காட்டிவிட்டு, சர்வதேச அரங்கு தான் இப்படியிருக்கிறது என்றால் புதிதாக சுதந்திரம் பெற்றிருக்கும் நம்மிடம்தான் என்ன வாழ்கிறது? என்று கேட்டு, மிகப் பெரிய தலைவர்கள் பேசுகிறார்கள் — வேற்றுமைகளுக்கு மத்தியில் ஒற்றுமையைக் கண்டுகொண்டிருப்பதாக அழகாகப் பேசுகிறார்கள்—ஆனால், தினசரி, அன்றன்றாடம் என்ன காண்கிறோம் நாம்? சகோதரத்துவம் இருக்கிறதா! ஒற்றுமை உள்ளதா!! என்னைக் கேட்டால், சகோதரத்துவம் என்கிற வார்த்தையின் உண்மைப் பொருள் மறைந்து வரும் ஆபத்தே தென்படுகிறது'', என்று தெரிவித்திருக்கிறார்.

தேசுமுக் செப்பிய இம்மொழியைக் கேட்ட நமது 'இந்து' ஏடும், வேகமாகப் பேனாவை எடுத்து, "ஆமாமாம்! தேசீய உணர்ச்சிக்கு ஊறு ஏற்பட்டுக்கொண்டுதான் உள்ளது. பிரிவினைச் சக்திகள் வளர்ந்துகொண்டுதான் உள்ளன. இது ஒழிய, மாணவர்களுக்கு, தேஷ்முக் அரிய உபதேசம் தந்துள்ளார்'' எனும் பொருளில், தலையங்கம் தீட்டி, தனது ஐக்கிய ஆலாபனத்தை, காட்டி இருக்கிறது.

*

"மத ஊர்வலம் போனபோது மண்டியிடவில்லையாமே, நீ? ஏடா'' என்று பிரபு கேட்க "ஆம்பிரபோ! மழை பெய்தது...'' என்று ஏழை இழுக்க, "ஓகோ! மண்டியிட்டால் நீ அணிந்திருக்கும் பீதாம்பரம் சேறாகிவிடும். என்று தயங்கினாயோ—திமிர் பிடித்தவனே—'' என்று பிரபு ஓங்காரக் கூச்சலிட ஏழை கரங்களைக் கூப்பிவேண்ட, "இந்தக் கரங்கள் இருப்பதால் தானே இவ்வளவு திமிர் உனக்கு? சேவகர்காள்! இழுத்துச் சென்று இவன் கரங்கள் இரண்டையும் வெட்டி வீசுங்கள்'' என்று பிரபு கட்டளையிட, "ஐயோ! இது அடுக்குமா, உங்களுக்கு. நீதியா! நேர்மையா!!'' என்று ஏழை கண்ணீர் சொரிய, "நான் தீர்ப்பு வழங்கிய பிறகும். மறுப்பா சொல்கிறாய்? மதோன்மத்தனே! இவன் நாக்கையும் அறுத்து எரியுங்கள் ......'' என்று கட்டளையிட்ட பிரபுக்கள் இருந்தனராம் பிரான்சில்! புரட்சிக்கு முன்பு! இவ்வளவு அட்டகாசம் செய்த பிரபுக்களுக்கு உறுதுணையாயிருந்த மன்னனையும் அவன் மனைவியையும், பிறகு மக்கள் மன்றம் என்ன செய்தது என்பதையும், பிரெஞ்சு புரட்சி சொல்லுகிறது, நமக்கு. நாடேமிரண்ட அரசி அண்டாய்னட் என்பாளை, பலி பீடத்திலே நிறுத்தி, குனி! நிமிர்! படு! தலையை வை! என்று கட்டளையிட்டு, கண்டதுண்டமாக்கினர் என்கிற காட்சிகளையும் அறிவோம் நாம். இப்படி இரத்தமும் கண்ணீரும் சிந்திய மக்கள் மன்றம் உலகுக்கு வழங்கிய உன்னதச் சொற்கள்தான் சுதந்திரம்—சமத்துவம்—சகோதரத்துவம் — எனும் மூல முழக்கங்கள்! இந்த அரிய முழக்கங்களில், சகோதரத்துவம் என்பது கடைசியிலிருப்பது, அழகான ஒரு உண்மையைச் சொல்லாமல் சொல்லுகிறது. முதலில் சுதந்திரம்! பிறகு சமத்துவம்! கடைசியில் சகோதரத்துவம்!

தளைகள் அறுபட வேண்டும் மனிதனுக்கு முதலில் — பிறகு அவனுக்கு சம உரிமையும் வாழ்வும் வழங்கப்பட வேண்டும் — இரண்டும் ஏற்பட்டுவிட்டால், சகோதரத்துவம், தன்னாலே மலராமற் போகாது! பசியும், அடக்கு முறையும் இருந்தால் தானே, பூசலும் எதிர்ப்பும் கிளம்பும்? இந்த நிலைமை ஏற்பட்டுள்ளதா, சமூகத்தில் என்பதை உணர வேண்டும்! சுதந்திரம், உண்மையான உருவில் கிடைக்கவில்லை, மக்களுக்கு. தலைகளை வெட்டியும், உயிர்களைத் தத்தம் செய்தும், பிரெஞ்சு மக்கள் பாடுபட்டுப் பெற்ற "குடியரசு'' பிறகு சிதைந்து, நெபோலியன் போன்ற சர்வாதிகாரிகளுக்காளாகி இன்று நித்ய கண்டம் பூர்ணாயுசாக வாழும் சோகக் காதையை உலகறியும்!! காரணம், சுதந்திரமும் சமத்துவமும் உண்மையான அளவில், பிரெஞ்சு மக்களுக்குக் கிடைக்கவில்லை; இடையிலிருந்தவர்கள் தட்டிக்கொண்டு போய்விட்டார்கள்! அதுபோலத்தான், இன்றும் இந்த உபகண்டத்திலே வாழும் மக்கள் இருக்கிறார்கள். வெள்ளையனை வீழ்த்தி பெற்ற சுதந்திரம், யாருக்குக் கிடைத்திருக்கிறது? மக்களுக்கா! இல்லை — இந்த உபகண்டத்தின் ஒவ்வொரு பகுதியிலிருப்போரும், தமக்குக் கிடைத்த சுதந்திரமாகக் கருதவில்லை, இதனை. தெற்கில் வாழும் நாம், டில்லிக்குக் கிடைத்த விருந்து என்கிறோம்! வடக்கில் வாழ்வோர் பிரபுக்களுக்குக் கிடைத்த பிரசாதம், என்கிறார்கள்!! இப்படி,

......டி. டி. கே. இந்தியாவை 'விற்க' வேண்டும் என்று சொன்னார்.

இந்தியாவைக் கடையில் வைத்து இது மிக நல்ல சரக்கு என்று காட்டி அமெரிக்காவை வசீகரித்து அவர்களிடமிருந்து பணம் பெறுவதாகச் சொன்னார்.

......எப்படியாவது இந்தியாவை விலைக்கு வாங்கிவிடவேண்டும் என்று ஆசைப்படுகிறார்கள் (அமெரிக்கர்கள்)

"கல்கி''

இந்த உபகண்டத்தின் ஒவ்வொரு பகுதியிலும், வந்த சுதந்திரத்தைப்பற்றி, கருத்தலேகள் உள்ளன.

சகோதரத்துவம் எங்கே?—என்று பெருமூச்சோடு கேட்கிருரே தேசுமுக், அவர் அன்ருேர் நாள், 'பம்பாய் மராட்டியருக்கே!' எனும் உரத்த முழக்கம் எழும்பிய காலேயில் என்ன செய்தார்? ஆமாம், என்று முரசொலித்து, அதற்கு டில்லி இணங்கமறுத்ததும் தனது பொறுப்புகளேயே உதறித்தள்ளிஞர்! மராட்டியப் பற்றின் காரணமாக—சுதந்திரம், தன் அகத்துக்குரியதை வழங்கவில்லே என்பதால்!! இப்படி வங்கம், பஞ்சாப், கேரளம், கன்னடம், ஆந்திரம், அஸ்ஸாம், போன்ற இடங்கள், தத்தம் மாநிலத்துக்கு வாழ்வளிக்கப்பட வேண்டும் என்று குமுருமலில்லே. தேசியத் தலேவர்கள், இது குறுகிய சகோதரத்துவம் எனக் கூறக்கூடும்! 'அகண்டது' தேவை என அறிவுறுத்தவும் கூடும்!!

உண்மையான சுதந்திரம் ஏற்படவேண்டும்—பிறகு சமத்துவம் முகிழ்க்கவேண்டும். அடுத்தபடிதான், எல்லோரையும் நேசிக்கவும், பாசம் கொள்ளவுமான இன்பநிலே உண்டாக முடியும்! வாழ்வு ஒரு போராட்டமாகயிருந்திருந்தால், புதையலேப் பெற்ற ஆபிரிகக் குடியானவன், நிலத்துக்காரனிடம் காட்டியே இருக்கமாட்டான் — ஆட்சி, மன்னனது என்ருலும் அங்கே வாழ்க்கை ஒரு சுமையாகயில்லாது சுகராஜ்யம் அமைந்திருந்ததாலேயே, அறமும் பண்பும் விளங்கிற்று, அங்கு!! இந்த அறமும் பண்பும் தழைக்கவே, மன்னனது ஆட்சியைவிட மக்களாட்சி முறை உண்டாயிற்று. இந்த மக்களாட்சியில், முதலில் சுதந்திரம் வேண்டும் அனேவருக்கும்! அதைத்தான், திராவிடநாடு கேட்கும் நாம் கோருகிருேம்.

அண்ணன் தம்பிகள் ஒரே வீட்டிலிருந்துகொண்டு சதா சண்டையும் சச்சரவும் கொண்டு வாழ்வதைவிடத் தனித் தனியாகப் பிரிந்துபோய், நன்ருக வாழ்வதும், பொதுஎதிரி ஏற்பட்டுவிடின் ஒன்றுசேர்ந்து எதிர்ப்பதும் சகஜம். தாஞடாவிட்டாலும் சதையாடும் என்பார்கள்! ஒவ்வொருவரும் சுதந்திரம் பெற்று வாழ்ந்தாலும், நாளேயதினம் தன்னேப்போன்ற ஒரு நாட்டுக்கு, மனித இனத்துக்கு, ஊறு ஏற்படுகிறதென்ருல், அதைத் தவிர்க்க உறுதுணே காட்டவே வருவர்—இதுதான் சகோதரத்துவம்—மனித பாசம் — கூட்டுறவுக் கொள்கை !!

அடிமையாகயிருக்கும் வரையில் மலராது, இது. கொஞ்சி, குழைந்து,ஆயிரம் உறவுகள் சொன்ஞலும் வாயும் வயிறும் வெவ்வேறுதான்! நாடுகள் விஷயத்திலும் இந்த உண்மை பொருந்தும்!!

*

எல்லோரையும் நேசி—என்ருர் இயேசு. மனிதசேவையே சிறந்த மார்க்கம் என்ருர், முகமது. அன்பே, முக்கியம் என்ருர், புத்தர். இவர்களனேவரும் உலகில் வாழும் மனித இனம் அனேத்தும் அன்போடு வாழவேண்டும் என்கிற ஆசையோடுதான் சொன்ஞர்கள். காந்தியடிகளும் இதையே, 'சர்வோதயம் என்ருர். மனித வளர்ச்சியில் ஆண்டான் அடிமைப் பேதத்தை ஒழித்து, சுதந்தரமும் சமத்துவமும் கண்ட கம்யூனிஸ்டு நாடுகள்கூட, அடுத்ததான சகோதர உணர்ச்சியை உலகெங்கும் பரப்ப வேண்டும்என்கிற ஆசையால்தான் "உலகப் பாட்டாளி மக்களே! ஒன்றுசேருங்கள்!", என்று அழைத்தார்கள். 'கோமின் பார்ம்' எனும் கூட்டும் அமைத்துக் கொண்டும், பாடுபட்டார்கள்.

ஆஞல் இருநூறுகோடி மக்களுக்கு மேல் வாழும் உலகத்தில், யாவருக்கும் ஒரே ஒரு சர்க்கார் அமைவதும், உலகம் முழுவதும் ஒரே நாடாக இருப்பதுமான நிலே, எப்போதும் ஏற்படப்போவது இடையாது. ஆஞல் ஆங்காங்கு வாழும் மனிதர்கள், 'சகோதரத்துவம்' எனும் பொருளினே உணர்ந்து, அன்பும் பாசமும் காட்டுகின்ற சூழ்நிலே, மலரும்படிச் செய்யலாம். உலக அரங்கிலேயே இந்த உத்தமக் காட்சியைக்காண முடியும் எனின், இந்த உபகண்டத்துக்குள் 'சகோதரத்துவ' உணர்ச்சியை உண்டாக்குவதென்பது கஷ்டமல்ல.

**சகோதரத்துவம் பேசிக் கொண்டு, சுதந்தரமும் சமத்துவமும் தராதபோதுதான், சிக்கல்கள் கிளம்புகின்றன.**

**சகோதரத்துவம்பேசியபடியே மற்றவர்களே அடிமைப்படுத்தவும், தமது மொழியைத் திணிக்கவும் முயற்சிக்கும்போதுதான் எரிமலேகள் வெடிக்கின்றன.**

தனக்கென விடுதலே விரும்பும் கூட்டத்தவரின் கோரிக்கைகளுக்குச் செவிசாய்த்தும், தன் உழைப்புக்கேற்ற ஊதியமும் வாழ்வும் விரும்பும்குடிமகனுக்கு அவைகளே வழங்கியும், நன்ஞேக்குடன் டில்லி ஆதிபத்தியம் நடக்குமேயாஞல், தேசுமுக் ஆசைப்படும் "மனித அன்பு", மலரும். வள்ளுவரையும், புத்தரையும் போற்றும் நாம், இந்த மனித உணர்ச்சியைப் பெரிதென மதிப்பவர்கள்.

"சகோதரா!!, என்று சொல்லிக் கொண்டு, யாவரும் பாரதஅன்னேயின் புத்திரர்களன்ரே!", என்று பாசுரம பாடியபடி, ஆதிக்கம் நடத்த முற்படும்வரை, சகோதரத்துவம் எங்கே? எங்கே? என்று, முகாரி பாடுகின்றநிலேமைதான் நீடிக்கும். தேசுமுக் போன்ருேர், இதனே உணரவேண்டும்—உரைக்கவேண்டும் டில்லி மூலவர்களிடம்! வாய்ப்பு கிடைக்கிறபோது, முகாரி பாடிடுவதால் மட்டும் முகிழ்த்திடாது, இன்போதயம். மலர்ந்திடாது,சகோதரத்துவம் எனும், மனிதக் கூட்டுறவு.

*

## குழந்தையின் குரல்!

"சென்னே ராஜ்யம், என்ற பெயர் வெள்ளேக்காரர்களால் சூட்டப்பட்டது. இன்னும் அதே பெயர் நீடிக்கிறது. இது தமிழ் மக்களுக்கு அவமானம்.

'தமிழ் நாடு' என்று சீக்கிரமே—அப்பெயர் மாற்றப்படும் என நம்புகிறேன். அதற்குத் தடை ஏற்படுமாஞல் அதைத் தகர்த்தெறியப் பாடுபடுவேன்."

வீரக் குரல் எழுப்புகின்ற இவர், வேறு யாருமல்ல, சென்னேச் சட்டசபை காங்கிரஸ் உறுப்பினர் தோழியர் குழந்தையம்மாள்! அவமானம் — பாடுபடுவேன் என்று, கோவை பீளமேட்டில் நடைபெற்ற சிலப்பதிகார விழாவில் பேசிஞராம்—செய்தியை "சமுதாயம்" ஏடு தருகிறது!! தமிழின் அருமையை அறிந்த அம்மையாரின் இந்த ஆர்வத்தையும் வீரத்தையும், பாராட்டுகிருேம். தடையைத் தகர்த்தெறியப் பாடுபடுவேன்! — எனும் அம்மையார், சட்டசபையில், 'தமிழ் நாடு' எனும் பெயர் மாற்றத் தீர்மானம் வந்தபோது எதிர்த்துக் கைத்தூக்கிஞரே, ஏனென்று கேட்கிறீர்களா? அதுதான் நமக்கும் புரியவில்லே !!

# டாக்டர் அடினூர்

போர்ச்சுழலில் அடிபட்டு, இரு கூருக்கப்பட்டு, வளர்ச்சிபெறும் நிலையிலிருக்கிறது மேற்கு ஜெர்மனி! போருக்குப்பின் கிழக்குப் பகுதி, ரஷ்யா வசமும் மேற்குப் பகுதி அமெரிக்கா—பிரிட்டன்—பிரான்சு முதலிய நேச நாடுகள் வசமும் ஒப்படைக்கப்பட்டன. இவர்களின் மேற்பார்வையில், ஒருகாலத்தில் உலகை அதிரச் செய்த ஜெர்மனி, கண்ணீர் சிந்தும் விதவைபோலக் கிடக்கிறது!! அமெரிக்காவின் பாதுகாப்பில் உள்ள மேற்கு ஜெர்மனியை ஆள்பவராகயிருப்பவர் அடினூர் என்பவர்.

தத்தளித்துப் பெரு மூச்சுவிட்டுக்கொண்டிருக்கும் மேற்கு ஜெர்மனியையும் விடவில்லை, டில்லி! அமெரிக்கா சென்று வெறுங்கையுடன் திரும்பிய டி. டி. கிருஷ்ணமாச்சாரியார், மேற்கு ஜெர்மனிக்கும் போய், அடினூரிடம் 'அட்சதை'போடுங்கள் என்று கேட்டிருக்கிறார். அடினூரும், 'ஆகா, ஆகட்டும்' என்று வரமளித்தாராம்! தவித்துக்கொண்டிருக்கும் அச்சிறு நாடு, இவ்வளவு பெரிய நாட்டுக்கு 'கடனும உதவியும்' தருவதாக வாக்களித்துள்ளது — அதைப் பெருமிதமாகக் காட்டிப் பேசியிருக்கிறார், டி. டி. கே!!

எந்த மேற்கு ஜெர்மனி 'உதவியும் கடனும்' அளிக்குமென்று டில்லி பெருமிதப்படுகிறதோ, அந்த மேற்கு ஜெர்மனியின் நகரமான 'பானில்' கிருஷ்ணமாச்சாரியாருடன் சென்ற டில்லி அதிகாரிகள் ஒரு ஓட்டலில் தங்கியிருந்தனராம்! அந்த ஓட்டலில், ஒரு திருடன்புகுந்து 225-ரூபாய் பணத்தை எடுத்துக்கொண்டுபோயிருக்கிறான் நமது அதிகாரியிடமிருந்து!! நிகழ்ச்சி, மேற்கு ஜெர்மனியில், திருடர்கள் உலவுமளவுக்குள்ள நிலைமையை விளக்கும். அப்படிப்பட்டநாடு, இந்தியாவுக்கு உதவ இருக்கிறது — அடினூரின் அன்பு கிடைத்துவிட்டது —என்று 'ஆலோலம்' பாடுகிறார்கள், டில்லியினர், பலன், கிடைத்தால் மகிழ்ச்சி! பலன் கொடுக்குமளவில் அடினூரும் இருந்தால் மிக்க மகிழ்ச்சியே!!

இட்லரின் நாட்டில், டில்லிபோய் உதவி கேட்குமளவுக்கு இருக்கிற அடினூர், யார் என்பதை அறிவது அவசியமாகும். பால்வெய்மூர் எனும் ஆசிரியர் அடினூரைப்பற்றி விரிவான நூலொன்று எழுதியுள்ளார். அதிலிருந்து கிடைத்த விபரங்கள், அடினூரை அறிந்து கொள்ளச் செய்யும்.

சென்ற மாதத்தில்தான்,மேற்கு ஜெர்மனியில் பொதுத் தேர்தல் நடந்தது. அந்தத் தேர்தலில் மறுபடியும் வெற்றிகரமாக வாகை சூடினார் "கொன்ராட் அடினூர்" மேற்கு ஜெர்மனியின் 'சான்செலர்' ஆக இருந்த அடினூர் மறுபடியும் தேர்தலில் நின்று வெற்றி பெற்றார்.

**மதனகோபால்**

1876ம் ஆண்டிலே பிறந்த அடினூர் ஒரு வழக்கறிஞர்! 1917 லிருந்து 1933 வரை அவர் கலோன் நகருக்கு 'லார்டு மேயராக இருந்தார். அப்பொழுதுதான் அவரை 'நாசி' அரசாங்கத்தார், அவர்களை எதிர்த்து, அதிருப்தியைத் தெரிவித்ததால் வேலையினின்று விலக்கி விட்டனர். அப்பொழுதிலிருந்து பனிரெண்டு ஆண்டுகள் 'கட்டாய ஓய்வு' எடுத்துக்கொண்டு ஓரளவுக்குத் தலைமறைவாகவும் இருந்தார். அந்தப் பனிரெண்டு ஆண்டுகள் அவருக்கு ஒருவிதமான 'வனவாசம்'தான்.

1945ல் ஜெர்மன் வீழ்ச்சிக்குப் பிறகு 'நேச' நாடுகளின் படை ரைன் நதியைக் கடந்தன. இரு அமெரிக்க ஆபீசர்கள் அடினூர் வீட்டிற்குச் சென்று கலோன் நகரத்தைக் கவனித்துக்கொள்ள இயலுமா என்று கேட்டனர். எழுபது வயதான அடினூர் அப்பொழுதுதான் நாசி சிறையினின்று வெளி வந்திருந்தார். பின்னர், அமெரிக்காவின் ஆணைப்படி கலோனுக்குச் சென்றார். அங்கு அவர் பாழாகாமல் கிடந்த முன்னூறு வீடுகளைக் கண்டார்! அவரது ஏழுகுழந்தைகளும், இரு மனைவியரும் இறந்து விட்டனர்—ஜெர்மன் படையில் வேலை செய்துக் கொண்டிருந்தனர். அதனால் அவர் அமெரிக்கருக்கு உதவுவதை இரகசியமாக வைத்திருக்கும்படி விரும்பினர். ஏனென்றால் நேச நாடுகளுடன் கூடி வேலை செய்பவர்களின் பிள்ளைகள் சாவது நிச்சயம்.

ஒரு முறை, அவர், யுத்தத்தின் முன்னைய காலத்தைக் குறிப்பிட்டு அவர் ஒரு அரசியல் வாதியாக ஆனது, தவிர்க்கமுடியாததேவையினால்தான், என்று கூறினார். ஜெர்மனி ஒரு கடன் மலிந்த கடைபோன்றது என்றும் கூறியுள்ளார். அதன் கடன்களைத் தீர்க்க வேண்டியது அதன் பொறுப்பு

என்றும் உணருகின்றார். அதற்கு கடன் கொடுத்தவர்களுக்கு கடன் இப்பொழுது தீர்க்கமுடியாத நிலைமையுள்ளது. அவரிடம்தான் கடன் கேட்கிறது, டில்லி! வரப்போவதாகவும் சொல்கிறது!!

கலோனில் அவர் வசதி ஏதுமின்றி இருக்கவேண்டிவந்தது. அங்கு மின்சாரம், நீர் ஏதுமில்லை. அங்கு போக்கு வரத்து வசதியான 'டிராம்', 'கார்' எதுவும் இல்லை. அங்கு வசித்த மக்களுக்கு உண்ண உணவும், இருக்க இடமும் இல்லை.

அங்கு தங்கியிருந்த அமெரிக்கப் படையினரை உணவு விடுதிகள் திறக்கச் சொல்லி வற்புறுத்தினார். வீடுகள் புதுப்பிக்கவும், கட்டவும் துவங்குவதற்கு முன் ரைன் நதியின் உடைந்த பாலத்தை சரிப்படுத்த வேண்டும் என்று திட்டமிட்டார். ஏனென்றால் அப்பொழுதுதான் கட்டிடங்கள் கட்ட வேண்டிய பொருள்களை மிக விரைவாகக் கொண்டுவரலாம்.

அந்தச் சமயத்தில் அவருடன் வேலை செய்த ஒரு தோழர் கூறுறார்: "எத்தனையோ வேலைகளிருந்தாலும் அவர் எப்பொழுதும் கிடைப்பார். கையிலிருக்கும் வேலையை மிகக்குறைந்த காலத்திலேயே உணர்ந்துஅதன் தரத்தை எடைபோட்டு விடுவார். இது அவருடைய பெரும்பாகத்தை மிகச் சுலபமானதாக்கிவிடுகிறது"

மற்றொருவர் கூறுகின்றார். ஒருவரின் சக்தியின் முடிந்த அளவிற்கு வேலை வாங்கும் திறமை, அறிவுரைகள் கூறும் தன்மை இவையே அலாதி அவரிடம். மற்றவர்களிடம் எப்படி அவர் தயவு தாட்சண்யமின்றி வேலை வாங்குகிறாரோ அப்படியேதானும் தயவு தாட்சண்ய மின்றி வேலை செய்கிறார்."

இயற்கையாகவே அவருக்கு உளநூல் அறிவு தெரிந்திருக்கிறது. வேலை வெட்டியின்றி வீண் பொழுதை அனாவசிய பேச்சு பேசி கழிக்கும் வாயாடிகள் என்றால் வெறுப்பு அவருக்கு.

இப்படித்தான் சோம்பலில் பெயர்போன ஓர் உத்தியோகஸ்தர் 'தூக்கமின்மை' நோயால் வாடுவதாகக் கூறினார். "இதற்கு மேல் என்ன செய்வது என்று எனக்குத் தெரியவில்லை. ஏனென்றால் கிடைக்கக்கூடிய எல்லாவிதமான மருந்துகளையெல்லாம் உட்கொண்டேன். நோய் போகவில்லை." என்று கூறினார் அந்த உத்யோகஸ்தர்.

"சோர்வடையும் வரை உழைத்தால் என்னவாம்?" என்று அவருக்கு உறைக்கும் வண்ணம் கூறினார் அடினார்.

"மனித சக்திக்கு ஓர் எல்லை உண்டு" என்ற எண்ணம் அடினாருக்கு இல்லை என்று நினைப்பதாகக் கூறுகிறார் மற்றொரு ஜெர்மன் அதிகாரி, அவரைப்பற்றி ஒரு அரசியல் எதிர்க்கட்சியாளர் இப்படித்தான் கூறுகிறார், அவர் சாதாரணமாக உணர்ச்சியற்ற, பாராமுகமான, மௌனமான மனிதன் என்று கருதப்படுகிறது. இந்தக் கருத்து தவறானது, அவருக்குப் பலனளிக்கக்கூடிய இடத்திலே அவர் இரக்கமும், அன்பும், நட்பும் காட்டுவதில் தவறுவதில்லை. இது அவருக்கு ஒரு சொத்து என்றுகூடக் கூறலாம். இதுதான் அவருடைய வெற்றியின் இரகசியம் என்று நான் கருதுகிறேன். அவர் வேலைக்குப் பயன்படக் கூடியவர்களிடம் இரக்கமும் அன்பும் உண்மையாகவே, காட்டுகிறார். ஆனால் அவர்கள் வேலையை முடித்தவுடன் அந்த இரக்கம் இறந்துவிடுகிறது, அன்பு அழிந்துவிடுகிறது.

"அந்தக் கட்டம் வருமுன் அடினார் ஒருவகை கவர்ச்சி பெற்றுவிடுகிறார். அதை தவிர்க்க முடிவதில்லை எவராலும். உள்ளங்களைத் தொடும் வண்ணம் அவர் அமைதியான இதயம் உள்ளது. பிறந்த நாளையோ அல்லது மேல் மாற்றலையோ அவர் மறப்பதில்லை. விழாவுடைய நாட்களுக்கு வாழ்த்துச் செய்தியும், துக்ககரமான நாட்களுக்கு அனுதாபச் செய்தியையும் அனுப்ப அவர், தவறுவதில்லை."

"அடினார் எப்பொழுதும் ஒரு சூதாடியைப் போன்றுதான் நடந்துகொள்கிறார். ஒரு தடவை ஒரு கருத்தைப் பிடித்துக்கொண்டால் அதை விடாமல், அயராமல் தளராமல் செய்து முடிப்பார். மற்றவர்களுக்குச் சந்தேகமோ அல்லது மனமாற்றமோ தரக்கூடிய தடைகள் அவருக்கு மகிழ்ச்சி தருவன."

போர் முடிந்தபிறகு கலோன் ஒரு புது அரசியல் இயக்கத்திற்கு நடுநாயகமானது. கட்சிகளின் கொள்கைகள் தரக்கூடிய திட்டங்களும், மற்ற கனவுக் கொள்கைகளும் மக்களை மனமயக்கத்தில் ஆழ்த்த முடியவில்லை. 1945க்குப் பிறகு, கிருத்துவ மத அடிப்படையிலே அரசியல் கட்சி ஆரம்பிக்க அச்சமயம் ஏதுவாக இருந்தது.

கிருத்துவ - ஜனநாயகக் கட்சி தோன்றியது. நேச நாட்டினரால் விதிக்கப்பட்டிருந்த தடைகள் நீக்கப்பட்டதும் அடினார் அந்தக் கட்சியில் சேர்ந்தார்.

அவருடைய தனித்தன்மை வாய்ந்த தோற்றமும், கலொனில் அவர் லார்டுமேயராக பணியாற்றியதின் மூலம் ஏற்பட்ட அனுபவமும் அவரை ஓர் முக்கியமான தலைவராக்கிவிட்டது. கட்சியின் பிரச்சாரத்திற்காக நாடு முழுவதும், மூலை முடுக்கு விடாமல் முழு மூச்சொடு சுற்றுப் பயணம் செய்தார்.

அவர் தன் முன்னாள் வாழ்நாளிலே கற்றுக்கொண்ட பாடங்கள் அவருக்குப் பெரிதும் பயன்பட்டன. இச்சமயத்தில் அது மட்டுமின்றி அவர் அனுபவத்தின் மூலமறிந்த பொன்னான பாடமான 'பொறுமை'யை பெரிதும் கடைப்பிடிக்க வேண்டியவரானார்.

டாக்டர் ஹொல்ஜாப்பெல் ஒரு கூட்டத்தை ஏற்பாடு செய்திருந்தார். அதற்கு அவர் வந்திருந்தார். ஆனாலும், தலைவர் அமரக்கூடிய நாற்காலி காலியாகவே

ஒரு பள்ளிக்கூடத்தில் 'பிராணிகள் வாரம்' அநுஷ்டித்தார்கள். ஒவ்வொரு சிறுவனும் தன் வீட்டு நாய், பூனைகளிடம் தான் காட்டிவரும் கருணையைப்பற்றிக் கூறினான். ஒரு சின்னஞ் சிறு பையன், "என் நாயை உதைத்த பையனை நான் எட்டி ஓர் உதை விட்டேன்" என்றான்.

—எம். டபிள்யூ.

யிருந்தது. திடீரென்று டாக்டர் அடினார் மேடைமீது தோன்றினார். காலியாகக் கிடந்த நாற்காலியில் அமர்ந்தார். "1876-ல் பிறந்ததினால் நான்தான் இங்கு இருப்போரில் எல்லோரையும்விட வயதானவன். அதனால், யாரேனும் மறுப்பு தெரிவிக்காமலிருந்தால், நான் இந்தக் கூட்டத்திற்கு தலைமை தாங்குகிறேன்." என்று கூறினார்.

பொன்னான நேரத்தைப் பாழாக்க விரும்பாதவர் அடினார். அதனால் அவர் தன் காரோட்டியை எழுபது மைல் வேகத்திற்கும் மேல் ஓட்டச் சொல்லுவார், எப்பொழுதும்.

1949-ல் நேச நாட்டினர் மேற்கு ஜெர்மனியில் ஐக்கியத் தேர்தல் வைக்க ஒப்புக்கொண்டனர். அடினாரின் கிருத்துவ - ஜனநாயகக் கட்சி தேர்தலில் பெரும் வெற்றி பெற்றது. ஆனாலும் அந்தக் கட்சியினால் முழு அளவில் அதிகப்படியான, அரசாங்கம் நடத்தக் கூடிய அளவில் இடங்கள் கிடைக்கவில்லை. இருந்தும் பல கட்சிகளின் உதவியுடன் புதிய ஜெர்மனியின் 'பெடரல் சான்செலர்' ஆனார், அடினார். இப்போதும், அவர் ஜெர்மனியினை நடாத்தும் பொறுப்பில் வைக்கப்பட்டிருக்கிறார்.

பெடரல் சான் செல்லராக ஆன பிறகு அவர்பேசிய முதல்பேச்சின் படிதான் அவர் நடந்து கொண்டார் அடுத்துவந்த ஆறு ஆண்டுகளில். அதாவது நேசநாட்டு ஹைகமிஷனர்களின் உதவியோடு மெள்ள மெள்ள ஜெர்மனியை ஒரு சுதந்தர நாடாக்குவது என்பது.

"தோற்றவர்களின் படைக்கலன்களிலேயே சிறந்தது பொறுமைதான். அது என்னிடம் நிறைய உள்ளது." என்று கூறுகிறார் அடினார்.

அமெரிக்கா ஆட்டுவித்தபடியெல்லாம் ஆடும் கைப்பாவை போன்றிருந்தாலும் டாக்டர் கோன்ராடு அடினார் மேற்கு ஜெர்மனியை முன்னேற்ற நிலைக்குக் கொண்டுவரப் பாடுபடுகிறார் என்பதில் ஐயமில்லை.

★

# பண்பாடு

பேராசிரியர் சா. அப்துல்கபூர் எம்.ஏ.,

இலக்கியம், கலை, நாகரிகம், பண்பாடு என்பனபோன்ற சொற்கள் இன்றைய உலகின் ஒவ்வொரு பகுதியிலும் மிகுதியாக ஒலித்துவரக் காண்கிறோம். பல்லாண்டு காலம் அடிமை வாழ்விலே சிக்கி மிடிமை வாழ்வு நடாத்திய நாடுகள் விழிப்படைந்து விடுதலை யடைந்ததும், களிப்படைந்து முன்னேற விழைகின்றன.

பண்டையோர் வாழ்க்கைமுறைகளைப் படம் பிடித்துக் காட்டும் கண்டை நிகர் இலக்கியங்களும், மக்கள் அழகுணர்ச்சியின் நுண்ணிய உயிர்ப்பெனத் திகழும் அருங்கலைகளும், அகத்தையும் புறத்தையும் ஒருங்கே உயர்த்துவதற்குதவுகின்ற நாகரிகமும், இம்மூன்றாலும் உருவாக்கப்படுகின்ற பண்பாடும் ஒரு நாட்டு முன்னேற்றத்தின் ஒப்பிலாதத் தூண்களெனச் சொல்லலாம். ஆகவே முன்னேற்றத்தை நோக்கி விரைந்து செல்ல விழைகின்ற மக்கள் இலக்கியத்தைப் போற்றுகின்றார்கள். கலையை வளர்க்கின்றார்கள். நாகரிகத்தைக் குறித்துப் பேசுகின்றார்கள். பண்பாட்டின் மேம்பாட்டை உணர்கின்றார்கள். இந்நிலையிலேதான், இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்பே இன்சுவை இலக்கியங்களையும் கவின்பெறு கலைகளையுங் கொண்டு நாகரிக வாழ்வு நடாத்திய நற்றமிழ் நாடு பண்டைப் பெருமைகளை எண்ணி எண்ணி மகிழ்கின்றது. ஆயிர மாயிரம் ஆண்டுகளாய் அழியாமற் போற்றிவந்த பண்பாட்டின் உயர்வினை உன்னியுன்னி உவகை பூக்கின்றது.

'பண்பாடு' என்னும் சொல்லே அதன் பொருளைத் தெளிவாக விளக்குகின்றது. வறண்ட நிலத்திலே வளமாக நீர் பாய்ச்சி, ஏர் பூட்டியுழுது, பண்பட்ட நிலத்திலே விதையினை விதைத்து எருவிட்டு வளர்த்து, களைபிடுங்கிக் காத்து, பொன்னெனக் குலுங்கும் செந்நெல்லைக் கண்டு சிந்தை குளிர்கின்றான், உழவன், வண்டமிழ்ப் பண்பை, தண்டமிழ்க் குறளால் பாடி வான் புகழ் கொண்ட வள்ளுவனும், பண்பாடு வளர்க்கும் செஞ்சொல்லோவியர்களான புலவர் பெருமக்களை உழவுக் கண்கொண்டு நோக்கினான்.

" வில்லே ருழவர் பகை
கொளினும் கொள்ளற்க
சொல்லே ருழவர் பகை"

எனப் பாடினான்

படைவீரர்கள் வில்லையே ஏராகக் கொண்டு பகைப் புலங்களை உழுகின்றார்கள். சொல்லாய்ந்த கூத்தர்களாகிய புலவர்களோ, சொல்லையே ஏராகப் பிடித்து மக்கள்தம் நெஞ்சக் கழனியை உழுது பண்படுத்தி, நற்கருத்தாம் வித்துக்களை விதைத்து, நல்வாழ்வாம் பயிரைக் கண்டு மகிழ்கின்றார்கள். இவ்வாறு வாழ்வுப் பயிரின் வித்தெனத் தகும் கருத்துக் கருவூலங்களைக் கன்னித் தமிழிலே வடித்தெடுத்த புலவர்கள் தமிழ் நாகரிகத்தையும், பண்பாட்டையும் பொருத்தமான இடங்களிலே புலப்பட வைத்துள்ளனர்.

ஒரு நாட்டின் உயர்வு, அந்நாட்டு மக்களைப் பொறுத்ததே எனப் புகன்றார், பைந்தமிழ் மூதாட்டி ஔவைப் பாட்டி. நாடாயிருப்பினும் காடாயிருப்பினும், பள்ளமாக இருப்பினும், மேடாக இருப்பினும் நிலம் பெருமைக்கு அடிப்படையன்று. விண்ணை முட்டும் மலைகளும், கண்ணைக் கவரும் இயற்கை யெழிலும், இன்பச் சோலைகளும் இனிய சாலைகளும், வற்றாத ஆறுகளும்வளமான வயல்களும் இருப்பதனால் மட்டும் நாட்டிற்கு உயர்வு வராது. வறண்ட

பாலைவனமாயினும் ஆங்கு வாழ்கின்ற மக்கள் நல்லவர்களாகிவிட்டால் அந்நிலம் பெருமைக்குரியதாகிறது. இது கருதியே,

“நாடா கொன்றோ காடா கொன்றோ
அவலாகொன்றோ மிசையா கொன்றோ
எவ்வழி நல்லவ ராடவர்
அவ்வழி நல்லை வாழிய நிலனே ;

என வாழ்த்தினர் ஔவை.

இதனையே இன்னொரு முறையில்,

“உறுபசியும் ஓவாப்பிணியும் செறுபகையும்
சேராதியல்வது நாடு”

என்றார் வள்ளுவர்.

நாடு நாடாகத் திகழவேண்டுமாயின் மக்களை வருத்தும் பசிப்பிணியிருத்தல் கூடாது. பசிப்பிணியுடன் உடற்பிணியும், உட்பகையும், வெளிப்பகையும் இல்லாத நாடே நாடென நவின்றார் நாவலர் பெருந்தகை.

இத்தகைய நாட்டிலே வாழ்கின்ற மக்கள் எத்தகைய நாகரிகத்தைப் பின்பற்றி வாழவேண்டுமென்பதையும் வள்ளுவத் தோன்றல் தெள்ளுதமிழ்க் களஞ்சியத்திலே தெளிவூட்டத் தவறவில்லை.

“பெயக்கண்டும் நஞ்சுண் டாமைவர் நயத்தக்க
நாகரிகம் வேண்டுபவர்”

என்பது அப்பெரு நாவலர் பேருரை.

நம்மோடு பழகிய ஒருவர் நமது உணவில் நஞ்சுகலந்து கொல்லத் துணிகின்றார். அந்த நேரத்தில் அதைக் கண்டுணர்ந்து நாம் கூறிவிட்டால் அவர் உள்ளம் எவ்வளவு வேதனைப்படுமென்பதை உணர்ந்து, நஞ்சு கலந்த உணவைக்கூட நாம் உண்டு அமையவேண்டும்; அதுவே யாவராலும் விரும்பத்தக்க நாகரிகமான கண்ணோட்டத்தை விரும்புபவர் செயல். இத்தகைய உள்ள உயர்வுதான் தமிழ் வளர்த்த நாகரிகம். இந்நாகரிகம் உருவாகிய பண்பாடுதான் திருக்குறளின் உயிர்நாடிபோல ‘பண்புடைமை’ எனும் தலைப்பினைத்தாங்கி மாறாத முறையில், நூறாவது அதிகாரமாகவும் அமைந்தது. உலகமென்பது உயர்ந்தோர் மாட்டே என்னுமாப்போல் பண்புடையோரிடத்தில் பொருந்தியிருப்பதாய் உலகம் உள்ளதாகி இயங்குகின்றதென்ற கருத்தையும் இங்குதான் வள்ளுவர் வெளியிடுகின்றார். அறிவின் சிறப்பையும் ஆற்றலையும் குறித்து வானளாவப் புகழ்ந்த வள்ளுவர் —“அறிவுடையார் எல்லாம் உடையர்” என்ற முடிவுக்கு வந்த வள்ளுவர் — அறிஞர் பெருமகன் ஒருவனைப் பார்க்கின்றார். அவனோ அரம்போன்ற திறமுடையான். தன் அறிவுத் திறத்தால், அவனியின் அறிஞர் பெருமக்களை எல்லாம் வென்று வெற்றிக் கொடி நாட்டியவன். எல்லாம் அறிந்தான்; ஆனால் மனிதப் பண்பு அவனிடத்தில் மருந்துக்குக்கூட கிடையாது. ஆகவே அவன் வள்ளுவர் கண்களுக்கு ஓங்கி வளர்ந்ததோர் கம்பமெனக் காட்சி தருகின்றான்.

“அரம்போலும் கூர்மைய ரேனும் மரம் போல்வர்
மக்கட்பண்பு இல்லாதவர்”

இது போன்று, அறிவிருந்தும் பண்பிழந்த மக்களை வள்ளுவனார் காய்கின்ற இடங்கள் மிகப் பல. பிற உயிர்களின் துன்பத்தைத் தன் துன்பம்போல் கருதிக் காப்பாற்றாதவனை நோக்கி, “அறிவினான் ஆகுவ துண்டோ?” என்கின்றார். யார் மாட்டும் வெஃகி வெறிய செய்வானை நோக்கி. “அஃகி அறிவென்னும்?” என்றார், சான்றோர், உறுப்புக்களால் உயர்வு பெற்றிருக்கின்ற ஒருவனையோஒருத்தியையோ மனிதப் புனிதனெனக்கருதி மதிமயங்கார். பரந்த மார்பும் விரிந்த நெற்றியும், அறிவொளி வீசும் கண்களும், அழகொளி மிளிரும் முகமும், குன்றனைய தோளும், கண்டனைய மொழியும் வாய்க்கப்பெற்றான் ஒருவன், அறல்போல் கூந்தலும், பிறைபோல் திருநுதலும், கொலைவில் புருவமும் குவளைக்கண்ணும், எட்பூ நாசியும், எழிலார் காதும், பாலைச் சிரிப்பும், பவழ மேனியும் வாய்க்கப் பெற்றாள் ஒருத்தி. இவர்கள் இருவரும் மனிதனென்னும் தகுதியைப் பெறவேண்டுமாயின் எந்த அளவுக்குப் பண்புடையவர்கஇ என்பதையே நோக்குதல் வேண்டும்.

“உறுப்பொத்தல் மக்களொப்பு அன்றால் வெறுத்தக்க
பண்பொத்தல் ஒப்பதாம் ஒப்பு”

வள்ளுவரின் இவ்வாய்மொழிக்கொப்ப, உறுப்புக் குறைவுபட்டும் இன்றளவும் இலக்கியத்தில் புகழ் மணம் பரப்பி பொலிவுடன் திகதிகழும் புலவர் பெருமக்களைப் பார்க்கின்றோம். அவர்கள் பெற்றிருந்த பண்பாட்டின் காரணமாக, அங்கம் குறைந்தும் தங்கமெனத் திகழ்கின்றார்கள். உறையூர் ஏணிச்சேரி முடமோசியார், அந்தக்கவி வீரராக முதலியார் இரட்டைப் புலவர்கள் போன்றோர் இதற்குப் போதிய சான்றாவர்.

இவ்வாறு பண்டைத் தமிழர் கண்ட மனிதப் பண்பையே தமிழ்ப் பண்பெனப் பகர்கின்றோம். பல்லாயிரம் ஆண்டுகளாகத் தமிழ் மண்ணிலே ஊறிக்கிடக்கின்ற உயரிய பண்பாக அது காட்சிதந்து கனிவிக்கிறது. சங்கத்துச் சான்றோர் தந்த சொல்லோவியங்களில் உயிர் நாடியென அது ஒளிவிடுகிறது. கணியன் பூங்குன்றனார் பாடிய பாட்டின் தொடக்கம் இப் பண்பாட்டின் அடிப்படையை அழகுற அமைத்துக் காட்டுகிறது.

“யாதும் ஊரே யாவரும் கேளிர்” இதுவே தமிழ்ப் பண்பாட்டின் தலையாய நிலை. பண்டைநாட் புலவர்களும், இடைக்காலப் பிற்காலப் புலவர்களும், இவ்வுயரிய கொள்கையையே பல்வேறு உருவங்களில் தங்கள் கவிதைகளிலும், காவியங்களிலும், தனிப் பாடல்களிலும், பெரு நூல்களிலும் படம் பிடித்துக் காட்டியுள்ளனர். ‘பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்’ எனப் புகன்றார் பெரு நாவலர் பெருந்தகை. ‘ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்’ என்றார் திருமந்திரம் தந்த திருமூலர். சோழநாட்டிலே பிறந்து, பாண்டியிலே கணவனைப் பறிகொடுத்து சேர நாட்டிலே கோயில்கொண்ட கண்ணகியின் வரலாற்றை கன்னித் தமிழிலே பாடினார் இளங்கோவடிகள். அயோத்தியிலே அன்புத் தம்பியர் மூவரைக்கொண்டு, கங்கைக் கரையிலே வெங்கரியின் ஏறனைய வேடன் குகனுடன் தோழமை பூண்டு, ‘குரங்கினத் தலைவனும் சுக்ரீவனை அன்போடணைத்து, ‘அரக்கர்’ குலத்தின் வீடணனையும் உடன்சேர்த்து, உடன் பிறந்தோர் எழுவரெனக் கருதிய இராமனின் காதையைப் பாடினான் கம்பன். “பிறப்பில்

உயர்வும் தாழ்வும் சொல்லல் மடைமை" என்னும் இன்றைய புரட்சிக் கவிஞர்களின் எழுச்சிக் குரலும் இப் பண்பாட்டின் அரண்களாகவே அமைந்துவிடுகின்றன. மக்களினத்தின் ஒருமையையும், பெருமையையும் ஐக்கிய நாட்டவையினர் ஆராய்ந்து கூறுவதற்கும் எத்தனையோ ஆண்டுகளுக்கு முன்னால் அது தமிழர்களின் குறிக்கோளாக இலங்கிறது என்பதை நினைக்கவே நெஞ்சு இனிக்கின்றது.

இப் பண்பாட்டிலே ஊறிய தமிழன், அலைகளைப் பிளந்தும், மலைகளைக் கடந்தும், அயல்நாடுகளிலே அடியெடுத்துவைத்தான். ஈழத்தையும், கடாரத்தையும், மலேயாவின் சோலைகளையும், ஜாவாவின் சாலைகளையும், ஆப்பிரிக்காவின் ஆரண்யங்களையும் தனது சொந்த நாடுகளாகவே கருதினான். அங்கு வாழ்ந்தோரையெல்லாம் உடன் பிறந்தோராகக் கருதி உறவுபூண்டான். அழகு நகர்களை அமைத்தான்; உழைத்து உழைத்து, மண்ணான நிலத்தைப் பொன்னான நிலைக்கு மாற்றினான். உள்நாட்டிலும் உயர்ந்த நிலையிலே வணிகம் வளம்பெற்றது.

"நீரின் வந்த நிமிர்பரி புரவியும்
காலின் வந்த கருங்கறி மூடையும்
வடமலைப் பிறந்த மணியும்
பொன்னும்
குடமலைப் பிறந்த ஆரமும்
அகிலும்
தென்கடல் முத்தும் குணகடல்
துகிரும்
கங்கை வாரியும் காவிரிப் பயனும்
ஈழத்து உணவும் காழகத்து
ஆக்கமும்
அரியவும் பெரியவும் நெரியவீண்டி
வளந்தலை மயங்கிய நனந்தலை
மறுகு"

இவ்வாறு உலகப் பொருட்களெல்லாம் தமிழகத்துக் கடைவீதிகளிலே குன்றுபோலக் குவிந்துகிடந்தன. வணிகத்தின் நிமித்தம் வந்த வடவரும், சீனரும், கிரேக்கரும், உரோமரும், அராபியரும் தமிழ்ப் பண்பாட்டின் உயர்வைக்கண்டு உவந்து சென்றனர்.

இப்பண்பாடு ஒப்புயர்வற்ற ஓர் ஒருமை நோக்கைப் பயந்தது. மனித குலத்தின் உயர்வுக்காகப் பாடுபட்ட மனிதப் புனிதர்களால் விளக்கப்பட்ட நெறிகள், தமிழகத்திலே பரவிய வரலாறு விந்தைக்குரியதாகவே அமைந்துள்ளது. அமைதியான நெறியைக் கைக்கொண்ட அவ்வரலாறு அனைத்துலக மக்களுக்கும் ஒரு வழிகாட்டியெனக்கொள்ளலாம். இன்பத் தமிழகத்திலே வாழ்ந்த அன்புத் தமிழர்கள் மொழியாலும் பண்பாலும் அழியாத உறவு பூண்டு வாழ்ந்தனர். ஒரு தாய் வயிற்றிலே பிறந்த செம்மல் செங்குட்டுவனும், இளவல் இளங்கோவடிகளும்முறையே வெவ்வேறு கொள்கைகளுடன் வாழ்ந்தனரென அறிகிறோம். சிலம்புச் செல்வம் தந்த அவ்விளங்கோவுடன், மணிமேகலைக் காப்பியம் தந்த பௌத்தராகிய சாத்தனார், ஆராத நட்பினால் ஆர்க்கப்பட்டிருந்தார்.

★

## ஆச்சரியம்!

கனெக்டிகட் நகரில் ஒரு வீட்டுச் சொந்தக்காரருக்கு நகரசபைக் காரியாலயத்திலிருந்து ஒரே நாளில் இரண்டு நோட்டீஸ்கள் வந்தன. ஒன்று, 'உமது வீட்டு வரியை நூற்றுக்கு இருபது விகிதம் உயர்த்தியிருக்கிறோம்' என்பது; மற்றது, 'உமது வீட்டை வசிப்பதற்கு லாயக்கில்லாதது என்று இதன் மூலம் உமக்கு அறிவிக்கிறோம்' என்பது.

—'டைம்'

# மதுவும், மங்கையும்

மங்கோலிய மாவீரன் தைமூரின் நினைவாக மாபெரும் மாளிகையொன்றைக் கட்டினாளாம் அவன் மனைவி! கட்டிடம் எப்படி எழும்புகிறது என்பதை ஒவ்வொரு நாளும் சென்று கவனிப்பாளாம், அவள். அவளது அழகையும் உருவையும் தினசரி காணத் துவங்கிய, கட்டிடச் சிற்பிக்கு, எல்லையிலாத காதல் ஏற்பட்டுவிட்டது. காதலுக்குத்தான் கண் மண் தெரியாதே! அவளிடமிருந்து ஒரே ஒரு முத்தமாவது பெற்றால்தான் உயிர்தரிக்கும் என்கிற நிலைக்கு வந்துகொண்டிருந்தான் சிற்பி!! அவனுடைய நடையுடைகள் மூலம், அவன் உள்ளத்தை உணர்ந்துகொண்ட அவள், பித்தம் குறைய வழிசெய்யவேண்டும், இல்லாவிடில் பேராபத்தில் சிக்கிக்கொள்ளப்போகிறான் என்று பயந்து, ஒரு நாள் கூடை நிறைய முட்டைகளைக் கொண்டுவந்து தின்னும்படி சொன்னாளாம். அவன் தின்று முடித்ததும்,

"முட்டையின் ருசி எப்படி?"

"நன்றாகத்தானிருந்தது."

"நான் அதைக் கேட்கவில்லை. ஒரு முட்டைக்கு இன்னொரு முட்டை ருசியில் மாறுபட்டிருந்ததா? என்பதைச் சொல்லும்."

"இல்லையே! எல்லாம் ஒரே மாதிரியாகத்தானிருந்தது..."

"முட்டையில் சிறிது பெரிது இருந்தாலும் ருசி ஒன்றுதான். அதுபோலவே, பெண்கள் பல மாதிரியிருப்பினும், அவர்களிடம் பெறும் முத்தம்."

குறிப்பாகச் சொல்லிய, தைமூரின் மனைவி, சிற்பி திருந்திவிடுவான் என்று எதிர்பார்த்தாள். சிற்பியும் "நீங்கள் சொல்லுவது உண்மைதான் அம்மணி! கொஞ்சம் இருங்கள்," என்று சொல்லி, எங்கோ போய்விட்டுத் திரும்பிவந்தான். ஒரு கையில் நல்ல தண்ணீர் இருந்தது! அந்தக் குவளையை நீட்டி, தயவுசெய்து குடியுங்கள் என்றான். குடித்தாள் அவள்.

"ருசி எப்படி?"

"எப்போதும்போலத்தான் உள்ளது."

இன்னொரு கையிலிருந்த குவளையை நீட்டி அதையும் குடிக்கச் சொன்னான். அதில், மது இருந்தது. அதையும் தட்டாமற் குடித்தாள் அவள்.

"இது எப்படி இருக்கிறது?"

"வயிறெல்லாம் எரிகிறதே!"

"இதுபோலத்தான் அம்மணி. இரண்டும் நீர்தான். ஆனால் ஒன்று எப்போதும் ஒரே மாதிரியாகயிருக்கிறது. சிலவகையானது மட்டும், எரிச்சலையும் ஆசையையும் உண்டுபண்ணிவிடுகிறது"

சிற்பி, விரும்பி நின்ற ஒரே ஒரு முத்தம் இந்தப் பதிலுக்குப்பிறகு கிடைக்கத்தானே செய்திருக்கும்!!

"ஐயன்மீர்! அமெரிக்கா சென்றிருந்த அமைச்சர் கிருஷ்ணமாச்சாரியார், இந்தியாவில் கம்யூனிஸ்டு புரட்சி ஏற்பட்டால் ரஷ்யாவும் சீனாவும் இந்தியக் கம்யூனிஸ்டுகளுக்கு உதவும் என்று சொன்னாராமே. அப்படிச் சொல்லலாமா? அதுபற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன?", என்று கேட்ட பத்திரிகை நிருபர்களுக்குப் பதிலளித்த பண்டித நேரு அவர்கள், ஒரே ஒரு வார்த்தையில் பதிலளித்திருக்கிறார்! **வாய்த் தவறுதலாக இருக்கும்** — என்பதுதான் அந்தப் பதில்!!

ரஷ்யாவுடனும் சீனாவுடனும் கூடிக் குலவுகிறீர்கள். ஆனால் அந்த ரஷ்யாவும் சீனாவும், ஒரு நாளைக்கு உங்கள் அரசையே கவிழ்க்கும் என்று கருத்துத் தெரிவிக்கப்படுகிறதே, இது நல்லதா? — என்பதுதான், நிருபர் விடுத்த கேள்வியின் கருத்து.

வாய்த் தவறுதலாக இருக்கும் என்பது, நேரு அவர்கள் அளித்த பதில்!!

அமெரிக்காவின் தலைவர் புல்கானின் என்றோ, சீனாவின் பிரதமர் டல்லஸ் என்றோ, இந்தியாவின் பிரதமமந்திரி ஈடன் என்றோ விஷயமறிந்த ஒருவர் சொன்னால் அதனை அவசரத்தில் தெரிவித்ததெனலாம்! அப்படித் தெரிவித்தவரும் உடனே, தான் கூறியதைத் திருத்திக் கொள்ளவும் கூடும்!! இப்படியல்ல, டி. டி. கே. தெரிவித்திருப்பது. பேட்டி கண்ட 'நியுயார்க் டைம்ஸ்' நிருபரிடம், சிறு பிள்ளைக்குக் கதை சொல்லும் பாட்டிபோல, விளக்கமாக எடுத்துரைத்திருக்கிறார். இதனை எப்படி வாய்த் தவறுதல் எனக் கொள்ள முடியும்? கருத்துத் தவறு, என்றாலும் ஒப்புக்கொள்ளலாம்! நேரு, சகாவின் தவறை மூடி மறைக்க, வாய்த் தவறுதல் எனக் கூறுகிறார்!!

நேரு கூறுவதுபோல வாய்த் தவறுதலாகவே இருக்கட்டும்— அந்தத் தவறைத் திருத்தி, அறிக்கை விட்டிருக்கலாமே அன்பர்! இதுவரையிலும், அப்படியெதுவும் செய்யவில்லை—மறுப்பு அறிக்கை யெதுவும் கிருஷ்ணமாச்சாரியார் அளித்ததாகவும் செய்தி வரவில்லை—ஆனால் நேரு, வக்காலத்து வாங்குகிறார், வாய்த் தவறுதலாயிருக்கும் என்று!!

## வாதியுமாகிறார்! வக்கீலுமாகிறார்!!

"ஏனய்யா! இவரை, இரவு 8 மணிக்குமேல் வெட்டி எறியப் போவதாக வீதியில் சப்தம் போட்டதாகப் போலீசார் சொல்லுகின்றனரே, அப்படிச் சொன்னீரா?"

"சொன்னேங்க! அது என் வாய்த் தவறுதலுங்க..."

*

"ஆலையரசர்களே! உங்களுக்குத்தான் இந்தியா சொந்தம். ஏழைகளை யெல்லாம் இந்து மகாசமுத்திரத்தில் கொண்டு போய் உருட்டிவிடப் போகிறது, சர்க்கார்."

"கனம் சபாநாயகர் அவர்களே! உள்நாட்டு அமைச்சரின் கூற்றைக் கேட்டீர்களா? இதுதான், இன்றைய சர்க்காரின் கொள்கையா!"

"மன்னிக்கவேண்டும். வாய்த் தவறுதலாகச் சொல்லிவிட்டேன்."

* * *

எவரே ஒப்புவர் இதனை? வீதியில் போகிறவனும், பொறுப்பற்றவனும் ஏதாவது பேசலாம்! அதுவும், ஆபத்தான வகையில் பேசினார்கள் என்றால், அதைப் பற்றி அலட்சியம் காட்டமாட்டார்கள் போலீசார். முன்னெச்சரிக்கையாக நடவடிக்கை எடுக்கவே செய்வர். 'தடுப்புக்காவல்' சட்டம் வேறு இதற்காகவேயிருக்கிறது!! திடீரென பாகிஸ்தான்மீது படையெடுப்பேன்என்று பொறுப்புள்ள அமைச்சர் பேசுவதோ, இலங்கையின்மீது எமது விமானங்கள் குண்டுகளைப் பொழியும் என அறிக்கை விடுவதோ, சாதாரணமானதல்ல. பிறகு, வாய்த் தவறுதலாகச் சொல்லிவிட்டோம், என்று மழுப்புவதால் வீசிய சொற்கள் திரும்பிவிடப் போவதில்லை. இதனால்தான் ஆங்கிலத்தில் ஒரு பழமொழி உண்டு—**"எய்த அம்பு, இறந்த காலம், வீசிய வார்த்தை இம் மூன்றும் திரும்பி வராது"** என்பதாக. அதிலும் பலகோடி மக்களின் வாழ்வைச் செப்பனிடும் பணியிலிருக்கும் பொறுப்புள்ளவர்களுக்கு, வார்த்தைகளை இழப்பதில், கவனம் அதிகம் இருக்கவேண்டும். வார்த்தைகளால் வரும் வினைகள் ஏராளம்! வள்ளுவப்பெரியார், "யாகாவாராயினும் நாகாக்க—காவாக்கால், சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு" என்று சொன்னது இதற்காகத்தான்!! நமது குடும்பங்களில், சாதாரண விஷயங்களில் கூட. தவறுதலாகச் சொல்லிவிட்ட வார்த்தைகளால், முறிந்துபோன உறவுகளும், இழந்த நண்பர்களும் உண்டு. தனிப்பட்டவர்களுக்கே இது என்றால், ஒரு மாபெரும் சமூகத்தையின் நன்மை தீமைகளைக் கையில் வைத்திருக்கும் பொறுப்புள்ளவர்களுக்கு நாவடக்கம் மிக மிகத் தேவை!

இன்று இப்படி வாய்த்தவறுதலாக இதைச் சொன்னவர் நாளைய தினம், சர்க்காரின் இரகசியத் திட்டமொன்றை, வாய்த்தவறுதலாகச் சொல்லிவிடுகிறார் என வைத்துக்கொள்ளுங்கள். என்ன ஆகும்? அதிலும் கிருஷ்ணமாச்சாரி வகிப்பது நிதிமந்திரிப் பொறுப்பு! சமீபத்தில், பெரிய கார்களுக்கெல்லாம் இறக்குமதி வரியை அதிகப்படுத்தப்போவதாகத் திடீரென அறிவித்தார்கள். இப்படி அறிவிப்பு வரப் போவதாக இரண்டு நாட்களுக்கு முன்னதாக, வீட்டில் சாப்பிட்டுவிட்டு உரையாடிக்கொண்டிருக்கும்போது மைத்துனனிடமோ, மகனிடமோ, அமைச்சர் தெரிவித்துவிடுகிறார்—வாய்த் தவறுதலாகத்தான்!—என்றால், விளைவு என்ன ஆகும்? அவர்கள், இலாப நோக்கு இல்லாதவர்களானால் சரி! கொஞ்சம் சபலசித்தமுடையோராயிருந்தால், அரசு எவ்வளவு நஷ்டத்துக்கு ஆளாக நேரும்? இதனால்தானே, ஆண்டு தோறும் சமர்ப்பிக்கப்படும் "பட்ஜட்"டை, பரம இரகசியமாக அரசுகள் கருதுகின்றன. அந்தப் பட்ஜட்டைத் தயாரிக்கும் பொறுப்பிலிருக்கும் கிருஷ்ணருக்கு, 'வாய்த் தவறுதல்' ஏற்படலாமா! அப்படித் தவறியே

சொல்லிவிட்டாலும், தன்னால் அரசின் எதிர்காலத்துக்கு வரும் கெட்ட பெயரைத் தவிர்ப்பதற்காகப் பதவியை விட்டு விலகிக் காட்டுவதே பொருத்தமானதாகும்! அன்பர் கிருஷ்ணமாச்சாரியாரின் கூற்று, நேரு அவர்கள் சொல்லுவதுபோல, வாய்த் தவறுதலோ எனின் நிச்சயமாக இல்லை; கருத்துத் தவறு என்று வேண்டுமானால் கொள்ளலாம். இருதயத்தின் எதிரொலிப்பே, கருத்து எனப்படும்! வெளியில் எவ்வளவுதான் மாடல் சோஷியலிசம் பேசிடினும், இருதயத்துக்குள் டி. டி. கே. என்ன வைத்திருக்கிறார் என்கிற பிரதிபலிப்பே, இந்தக் கூற்றாகும்!!

*

அமெரிக்கா அனுப்பிடும் பொருள்களால் சீமானாகிய, இந்த வியாபார வேந்தரின் உள்ளம், பேசியிருக்கிறது இப்படி—ஆனால் 'வாய்த் தவறுதல்' என்று வக்கீலாகிறார் பண்டித நேரு! அமைச்சரின் ஆபத்தான கூற்றினை இவ்வளவு சாதாரணமாக மதிக்கும் நேரு அவர்கள், அண்மையில் பத்திரிகை நிருபர்களைச் சந்திக்கும்போது, மிகமிக வற்புறுத்திச் சொன்னாராம், சர்க்காரின் இரகசியங்களையெல்லாம். ஏடுகள் வெளியிட்டுவிடுவதாக.

"வக்கீல்களையெல்லாம் கலந்து ஆலோசித்தேன். சட்டப்படி, அந்தப் பத்திரிகைகளின் மீது நடவடிக்கை எடுக்கலாம் என்று அவர்கள் கருத்தளித்திருக்கிறார்கள். நான், மாகாண முதல்மைச்சர்களுக்கு எழுதும் கடிதங்கள் கூடப் பத்திரிகைகளில் வந்துவிடுகின்றன. சர்க்காரின் நடவடிக்கைகளில் பல, மக்களுக்குத் தெரியாமலிருக்க வேண்டும் என்பதற்காகவே, "அதிகாரிகள் இரகசிய சட்டம்" உள்ளது. அதன்படி, பத்திரிகைகள் மீது, நடவடிக்கை எடுக்கும்படி நேரலாம் என்று வருத்தமும் மிரட்டலும் கலக்கத் தெரிவித்திருக்கிறார்.

சர்க்காரின் மந்திரி ஆபத்தான அறிவிப்பைச் செய்கிறார்! அதனை வாய்த் தவறுதல் என விளக்கம் தரும் நேரு அவர்கள் "சர்க்காரின் இரகசியங்களை" வெளியிடும் ஏடுகளின் போக்கு ஆபத்தானதென்றும் சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படுமென்றும் தெரிவிக்கிறார்!!

அப்படியென்ன மாபெரும் இரகசியம், இவருக்கும் முதலமைச்சர்களுக்கும் இருக்கிறது — சர்க்கார் என்ன 'சதிகளில்' ஈடுபட்டபடியேதானா, அரசுபுரிகிறது —என்று கேட்கத் தோன்றலாம்.

நிருபர்கள் இந்தக் கேள்வியைக் கேட்பதற்குப் பதில், நேரு அவர்களை நோக்கி வேறுசில கேள்விகளை விடுத்தனராம்.

**"ஐயா! நீங்கள் முதலமைச்சர்களுக்கு அனுப்பும் இரகசியக் கடிதத்தை ஏடுகள் பிரசுரிக்கின்றதாகச் சொல்லுகிறீர்களே? ஏடுகள் மீது தவறுதலா அல்லது அதனை ஏடுகளுக்கு அளிப்பவர்கள் மீதா!"**

**"அதிகாரிகள் இரகசியச்சட்டம் என்பது நீங்கள் சொல்லுகிற இந்தக் காரணத்துக்காக, பிரிட்டிஷார் ஏற்படுத்தவில்லை. பொறுப்புவகிக்கும் அதிகாரிகள் தமக்குத் தெரிந்த இரகசியங்களை வெளியில் சொல்லாமலிருப்பதற்குத்தான் வைத்திருந்தனர். அதை இதற்குச் சம்பந்தப்படுத்துகிறீர்களே?"**

நிருபர்களின் இக்கேள்விகளுக்குத்தக்க பதிலைத் தரவில்லை, அவர். என்ன சொன்னாலும், இந்த நிலைக்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்கத்தான் வேண்டும், எதைப் பிரசுரிக்கலாம் என்று பாராமல் ஏடுகள் நடந்துகொள்ளுகின்றன, என்று மீண்டும் அவர் வலியுறுத்தவே பொல்லாத நிருபர், ஒருவர்,

**"அது சரிங்க! சர்க்கார் சம்பந்தமானதை நாங்கள், பயந்துபோடாமலிருந்து விடுகிறோம். ஆனால் மற்றவர்கள் இருக்கவேண்டுமே. உதாரணத்துக்குச் சொல்லுகிறேன். பிரிட்டனிடமிருந்து பல போர் விமானங்களை நீங்கள் வாங்கினீர்கள். நாங்களும், போடாமலிருந்தோம். ஆனால், இந்த விஷயத்தை நீங்கள் எங்கே வாங்கினீர்களோ அந்த இங்கிலாந்திலுள்ள பத்திரிகைகள் பிரமாதமாகப் போட்டனவே, அவைகளை என்ன செய்ய முடியும்?"** என்று கேட்டிருக்கிறார்! என்ன சொல்லமுடியும் நேரு!!

ஏடுகள், சர்க்கார் செய்யும் தவறுகளையும், வீணாக விரயமாக்கும் ஊதாரிச்செலவுகளையும், இதுபோது வெளியிட்டுவருவது, நேரு அவர்களுக்கு சங்கடமாக இருக்கிறது. மக்கள் மன்றத்தில் இதனால் ஏற்படும் அதிருப்தியைக் கண்டு அஞ்சுகிறார். ஒரு பக்கம் சமாதானக் குரல் எழுப்பிக்கொண்டு, இன்னொருபக்கம் ஆயுதத் தளவாடங்களுக்குச் சர்க்கார் பணத்தைக் கொட்டுவதும், அணைக்கட்டு—ஆலையமைப்பு — போன்றவைகளில் நடந்திடும் ஊழல்களும், வெளிநாட்டுத் தூதுவராலயங்களில் தண்ணீர் போல் பணம் விரயமாக்கப்படும் வேதனையையும், ஏடுகள் வெளியிட வெளியிட அச்சம் பிறக்கிறது இந்திய முதல்வருக்கு. மக்களுக்குத் தெரியத் தெரிய கெட்டபெயர் வளருமே என்கிற அந்த அச்சம், இனிமேலாவது அதுபோன்ற காரியங்களில் ஈடுபடாமலிருக்கும்படியல்லவா, நேருவின் மனதைத் தூண்டவேண்டும்? அதுதானே, நல்லது.

**ஆனால், அவருக்கு தனது சர்க்காரின் தவறுதல்களும், தான் இரகசியமாகத் தீட்டும் கடிதங்களும் மக்களுக்குத் தெரியாமலிருக்கவேண்டும் என்பதுதான் முக்கியமாகப்படுகிறது.**

சுற்றிலும் பூனைகளை வைத்துவிட்டு, ஒரு இடையர் குலமகள், பால் பறிபோகாமலிருக்க வேண்டும் என்று 'ஆண்டவனை' வேண்டிக் கொண்டாளாம்! அதுபோல, தன்னைச்சுற்றி, "கிருஷ்ணமாச்சாரிகளை" வைத்துக்கொண்டிருக்கும் நேரு, ஏடுகளை, மிரட்டுகிறார் — இரகசியத்தை வெளியிடாதீர் என்று!!

மனத் தூய்மையும், செய்வது யாவும் மக்களுக்காக எனும் எண்ணமும் இருந்திடின், இரகசியமோ, மூடி மறைக்க வேண்டியதோ இல்லை.

உள்ளொன்று வைத்துப் புறம் ஒன்று பேசும்போதுதான், 'எங்கே தெரிந்துவிடுமோ!', என்கிற பயமும் உருவாகிறது.

அப்படிப்பட்டவர்களின் தொடர்புகளை நேருஅவர்கள் அறுத்துக்கொள்வதே, நாட்டுக்கும் அவருக்கும் நல்லது. ஆனால், அவர்களுக்கு, வாதாடும் வக்கீலாகிறார்! மக்களுக்காக. வாதாடக் கூட அல்ல—செய்திகளை வெளியிடும் ஏடுகள்மீதோ, வாதியாகி வழக்குப் போடுவேன் எனவும் பயமுறுத்துகிறார்!!

★

# காஞ்சி கலைக்கழகம்

## துவக்க விழா

20—10—57 ஞாயிற்றுக்கிழமை காலை காஞ்சிபுரம் கண்ணன் திரைப் பட மாளிகையில் சீரும் சிறப்புமாக 'காஞ்சி கலைக் கழக'த் துவக்க விழா நடைபெற்றது. அன்றைய தினம் காலையிலிருந்து மழை பெய்து கொண்டே இருந்தும் கலைஆர்வம் படைத்த மக்கள் திரண்டு வந்து துவக்க விழாச் சிறப்புக் கூட்டத்தினை நல்ல வகையில் நடத்தத் துணைபுரிந் தனர்.

அலுவலகங்களில் உள்ளோரும் வியாபாரத் துறையில் உள்ளவர் களும் அன்றாடம் பொழுதுபோக்கு கின்ற முறையில் கூடிப் பொதுத் தொண்டில் ஈடுபட்டு உழைக்கவேண் டும் என்ற அடிப்படை நோக்கத்தைக் கொண்டு கலைக் கழகம் தோற்றுவிக் கப் பெற்றுள்ளது. சிறு சிறு விளை யாட்டுகள், உடற் பயிற்சி, இலவச நூல் நிலையம், திருக்குறள் வகுப்பு, இரவுப் பள்ளி, நாடகப் பயிற்சி, ஊர் துப்புரவு ஆகிய பல் வேறு துறைகளில் பணி செய்யும் நல்ல தொண்டினைக் கலைக் கழகம் மேற்கொண்டிருக்கின்றது.

அண்ணா அவர்களைத் தலைமைப் புரவலராகவும், காஞ்சி நகர மன்றத் தலைவர் வி. என். பெருமாள், இராஜா பஸ் உரிமையாளர் டபுள்யூ. கே. தேவராசன் ஆகியோரைத் துணைப் புரவலர்களாகவும் கொண்டு கலைக் கழகம் எல்லோரும் பயனும் பங்கும் கொள்ளும் வகையில் பொதுப் பணி யில் ஈடுபடுவதனைத் தன் குறிக்கோ ளாகக் கொண்டுள்ளது.

கலைக் கழகத்தின் இந்த நோக்கங் களை எடுத்துச் சொல்லி, அதன் துவக்க விழாவிற்குத் தலைமை ஏற்று நடத்தித் தருமாறு தலைமைப் புரவலர் அண்ணா அவர்களையும், சிறப்புச் சொற் பொழிவு ஆற்றுமாறு புரட்சி நடிகர் எம். ஜி. இராமச்சந்திரன் அவர்களையும், வாழ்த்துரை வழங்குமாறு தோழர் கே. ஏ. மதியழகன் அவர்களையும் கலைக் கழகத்தின் சார்பில் தோழர் மா. கி. தசரதன் முன்மொழிந்து அனைவரை யும் வருக வருக என வரவேற்றதற் குப் பின்னர் தோழர் சி. எஸ். பூஞ் சோலை அதனை வழிமொழிந்து பேசினர்.

அண்ணா தம்முடைய முன்னுரை யில் கலைக் கழகத்தின் உயர்ந்த நோக்கங்களைப் பாராட்டி அது நீண்ட காலம் பணியாற்ற வேண்டும் நன்கு பணியாற்ற வேண்டும் என்று குறிப் பிட்டார்.

பின்னர் தோழர் கே. ஏ. மதியழ கன் கலைக் கழகங்கள் தோன்று வதன் முக்கியத்துவத்தை விளக்கி, 'நம்முடைய கலை, நாகரிகம், பண் பாடு இவைகள் தனிச்சிறப்புடையன, தனித் தன்மை படைத்தன; அவற் றைப் பாதுகாத்தல் நம்முடைய கடமை, அந்தப் பணியில் இந்தக் கலைக் கழகம் தன்னுடைய முயற்சி யைச் செலுத்துதல் வேண்டும்' என்று வாழ்த்துரை வழங்கினர்.

அடுத்து, புரட்சி நடிகர் எம். ஜி. இராமச்சந்திரன் சிறப்புச் சொற் பொழிவு ஆற்றுகையில், கலைக்கழக விழாவில் கலந்துகொள்ளும் வாய்ப் புக்கு நன்றி தெரிவித்தும், கலைஞன் எவ்வகையில் சமுதாயத்தில் சிறப் பான இடம்பெறும் வகையில் தொண்டாற்றும் வாய்ப்பு இருக் கிறது என்பதனையும், அந்த நல்ல வாய்ப்பைப் பெறும் நடிகன் கொள் கையோடு இருத்தலில் இருக்கும் சிறப்பினைக் குறித்தும், ஆண்களைப் போன்று பெண்களும் பெருவாரியாக நடிப்புத் துறைக்கு வருதல் வேண்டும், படித்தவர்கள் இத்துறையில் முன் மாதிரியாக இருத்தல் வேண்டும் என் பதனையும். கலைக்கழகத்தின் பணி கள் சிறந்து, வளர்ந்து, அதன் கிளை கள் நாடெங்கும் பரவி மக்களுக்குத் தொண்டாற்ற வேண்டும் என்றும், உடற்பயிற்சியின் நன்மைகளைப் பற்றியும், தன்னாலான எல்லா உதவி களையும் கலைக்கழகத்திற்குச் செய்வ தாக உறுதியளித்தும் நல்லதோர் சொற்பொழிவு நிகழ்த்தினர்.

அண்ணா தம்முடைய தலைமை உரையில் நாடகங்களினால் நாட்டு மக் கள் பெறும் நன்மைகளைப்பற்றியும், அதில் ஈடுபடும் நடிகர்கள் எவ்வாறெல்லாம் விளங்குதல் வேண் டும் என்றும் நம்முடைய நாட்டில் இன்றைய தினம் கலைத்துறையில் செய்ய வேண்டிய நல்ல சீர்திருத்தங் களைப்பற்றியும் விளக்கி எடுத்துரைத் தார். "நாடகமாடிகளோடு சுற்று கின்றவர்கள், நாடகமாடிகள் என் றெல்லாம் நம்மைத் தூற்றியவர்கள் கூட இன்று நாடகத்தினால் ஏற்படும் நன்மைகளை உணர்ந்துகொண்டிருக் கின்றனர். தம்முடைய கொள்கைப் பிரச்சாரத்திற்கு அவற்றைப் பயன் படுத்துகின்றனர்" என்றும், எல்லாத் துறையில் உள்ளவர்களும் அதன் இன்றியமையாமையை உணர்ந் திருப்பதனை எடுத்துக் காட்டி, பண் டைய கிரேக்க நாட்டில் ஏதென்ஸ் நகரத்தில் நாடகங்கள் வளர்ந்த வகையை விளக்கினர். கலைக்கழகம் நல்ல முறையில் பணியாற்றத் 'தொடங்கி துவண்டுவிட்டது' என்றில் லாமல் 'வளர்ந்து வாழுதல்' வேண் டும் என்று விரும்பினர்.

இறுதியாகத் தோழர் சி. வி. இராச கோபால் நன்றி நவின்றார்.

★

> மனிதன் எவ்வளவோ விஷயங்களை நாகரிகப் படுத்தியிருக்கிறன்; ஆனால் பெண் இனத்தை நாகரிகப் படுத்துவதில் அவன் வெற்றி காண்பான் என்று தோன்ற வில்லை.
>
> —ஜார்ஜ் மெரிடித்